# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**

**திருமறைத்தீபம்**

**Issue No. 4 of 2012**

**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Design:** M. James
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1644
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.me

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

*மிகவும் குறுகிய காலத்துக்குள் இந்த இதழை முடித்து அச்சுக்கு அனுப்ப வேண்டிய நிலை இருந்தது. அந்தளவுக்கு பல வேலைகளுக்கும் மத்தியில் இதழைத் தயார் செய்ய கர்த்தர் துணை செய்தார். இதழில் வந்திருக்கின்ற அனைத்து ஆக்கங்களையும் நானே எழுத வேண்டிய சூழ்நிலையும் கூட. இருந்தபோதும் திரும்பிப் பார்க்கின்றபோது கர்த்தரின் கரம் இதழைத் தயாரிக்க உழைத்த எல்லோரோடும் இருந்திருப்பதைக் காண்கிறேன்.*

*இந்த இதழில் தொடர்ந்து மனித சித்தத்தைப் பற்றிய இரண்டு ஆக்கங்கள் வந்திருக்கின்றன. இறையியல் கோணத்தில் இவை அமைந்திருப்பதால் சிந்தித்து வாசித்துப் புரிந்துகொள்வது அவசியம். நிச்சயம் இவை வேத ஞானத்தில் நீங்கள் வளரத் துணை செய்யும். பாவத்தினால் மனித சித்தம் எத்தகைய பாதிப்பை அடைந்திருக்கின்றது என்பதில் கிறிஸ்தவர்கள் தொடர்ந்தும் சரியான, நிலையான நம்பிக்கைகளைக் கொண்டிராமல் தர்க்கத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். வாதங்கள் அவசியந்தான். ஆனால், இந்த விஷயத்தில் ஒரு பக்கம் மட்டுந்தான் சரியானதாக இருக்க முடியும். வேதம் மனித சித்தத்தைப் பற்றி விளக்குகின்ற உண்மை சுவிசேஷத்தை சரியாக விளங்கிக்கொள்ளவும், சுவிசேஷப் பணியை சரியாகச் செய்யவும் அவசியம். இது பற்றிய ஆக்கங்கள் தொடர்ந்தும் இதழில் வரவிருக்கின்றன.*

*தமிழ் வேதத்திற்கு சரியான மொழிபெயர்ப்பு தேவை. அது பலகாலமாக என் நினைவிலிருந்தபோதும் இப்போதுதான் என் கருத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதை மிகவும் சிந்தித்துப் பார்த்து எழுதியிருக்கிறேன். மொழிபெயர்ப்பு மூல மொழியை முறையாகத் தழுவியதாகவும், மொழி நடை சமகாலத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருப்பது அவசியம். புதிதாக வந்திருக்கின்ற மொழிபெயர்ப்புகள் இந்த இரண்டையும் நிறைவேற்றத் தவறியிருக்கின்றன. இந்தக் குறை நீங்க கர்த்தர் வழிகாட்ட வேண்டும்.*

*தமிழில் பிரசங்கிப்பவர்கள் பிரசங்க மொழி நடையில் அக்கறை காட்டுவது அவசியம். மக்களுடைய இருதயத்தை சத்தியம் தொட வேண்டுமானால் அந்த சத்தியம் கொடுக்கப்படுகின்ற மொழிநடையில் கவனம் செலுத்தாமல் இருக்க முடியுமா? பிரசங்கத்தில் அக்கறை காட்டுவதுபோல் பிரசங்க நடையிலும் அக்கறைகாட்ட வேண்டும் என்ற ஆலோசனையை அடுத்த ஆக்கம் தருகிறது. அத்தோடு 1689 விசுவாச அறிக்கையைப் படித்துப் புரிந்துகொள்ளப் பயன்படுத்த வேண்டிய விதிமுறை பற்றியும் விளக்கியிருக்கிறேன். இதுவரை வந்திருக்கும் இதழ்களைப் போலவே இதையும் கர்த்தர் தன் திருச்சபையின் நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டால் அதுவே எங்கள் பணிக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம். - ஆசிரியர்*

# தமிழ் வேதம் உங்களுக்குப் புரிகிறதா?

பல வருடங்களுக்கு முன்பு என் நாட்டில் எனக்கு ஒரு தொலை பேசி செய்தி வந்தது. தொடர்பு கொண்டவர் தமிழ் வேதாகமம் ஒன்று வேண்டுமென்றும், சுவிசேஷ செய்தியை விளக்கும் கைப்பிரதி வேண்டும் என்றும் கேட்டார். கேட்டவர் என் நாட்டைச் சேர்ந்த வெள்ளையர் என்பதால் உங்களுக்கு எதற்கு இதெல்லாம் என்று கேட்டேன். அதற்கு அவர், நான் ஒரு டாக்டர். சமீபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் மருந்து வாங்க வந்தார். அவர் கர்த்தரை அறியாதவர். அவருக்கு இயேசுவைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவருக்குக் கொடுப்பதற்காகத்தான் கேட்கிறேன் என்று சொன்னார். இந்த டாக்டரையும் எனக்கு முன்பின் தெரியாததால் எப்படி என்னைத் தேடிப்பிடித்தீர்கள் என்று கேட்காமல் இருக்க முடியவில்லை. அதற்கு அவர் பல இடங்களில் விசாரித்துப் பார்த்து கடைசியில் நண்பரொருவர் உங்களைப் பற்றிச் சொன்னதாகக் கூறினார். என்னால் முடிந்ததைச் செய்கிறேன் என்று அவரிடம் சொல்லிவிட்டு யோவான் சுவிசேஷ நூலொன்றையும், கிறிஸ்தவத்தைப் பற்றி நானெழுதிய ஒரு சிறு நூலையும் அவருக்கு அனுப்பி வைத்தேன். நான் பயன்படுத்தும் தமிழ் வேதாகமம் மட்டுமே அப்போது என் கையில் இருந்தது. அதனால் அதை அவருக்குக் கொடுக்க முடியவில்லை.

இது நடந்து முடிந்து இரண்டு வாரங்களில் எனக்கு ஒரு இ-மெயில் வந்தது. அதை அனுப்பியவர் தன்னைப் பற்றிச் சுருக்கமாக விளக்கியிருந்தார். யாருக்காக நான் யோவான் சுவிசேஷ நூலையும், என்னுடைய நூலையும் அனுப்பியிருந்தேனோ அவரே அந்த இ-மெயிலை எழுதியிருந்தார். தன் பெயர் அவ்வை நடராஜன் என்றும், தான் தஞ்சாவூர் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் என்றும் அறிமுகப்படுத்தியிருந்தார். நான் அனுப்பிவைத்திருந்த நூலைப் பற்றி எழுதியிருந்த அவர், தான் அநேக தமிழ் பட்டதாரிகளுடைய ஆய்வுகளை சரிபார்த்து அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்கு காரணமாக இருக்கிற பதவியில் இருந்ததாகவும், இதுவரையில் அழகான தமிழில் இனிமையாக என் நூலில் இருக்கும் தமிழ் போல் வாசித்தது குறைவு என்றும் என் தமிழ் நடையைப் பாராட்டி எழுதிவிட்டு, உடனடியாக என்னைப் பார்க்க வேண்டும், எப்படிப் பார்க்க முடியும் என்று எழுதிக் கேட்டிருந்தார். அவர் கேட்டுக் கொண்டபடியே அவரை நான் என் ஊரில் சந்திக்க நாளைக் குறித்துக் கொடுத்தேன். சொன்னபடியே அந்த நாளில் நானிருந்த ஊருக்கு வந்து எனக்கு போன் செய்தார். நன்பரொருவருடைய வீட்டில் தங்கியிருந்த அவரை சந்திக்க

போனபோது கையில் ஒரு நீல நிற சால்வையோடு வந்து அதை என் கழுத்தில் போர்த்தி வாழ்த்துக்கள் தெரிவித்தார். அதற்குப் பிறகு அந்த வீட்டு ஹாலில் அமர்ந்து ஒரு மணி நேரத்துக்கு மேலாக இருவரும் மனம் விட்டு பேசினோம். அவர் முன்னாள் துணை வேந்தர், தமிழ்ப் பேராசிரியர் மட்டுமல்ல மேடைப்பேச்சாளர் என்பதையும் அறிந்துகொண்டேன். தமிழகத்தில் தன்னைத் தெரியாதவர்கள் இருக்க வாய்ப்பில்லை என்றும் சொன்னார். பேச்சு ஆரம்பத்தில் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும், தமிழ் எழுத்தாளர்களையும் பற்றியதாக இருந்தது. பின்னால் கிறிஸ்தவத்திற்குத் திரும்பியது. சென்னையில் தான் போகக்கூடிய சபையிருக்கிறதா, வேத சத்தியங்களை யாராவது விளக்கிச் சொல்லக்கூடியவர்கள் இருக்கிறார்களா என்றெல்லாம் ஆர்வத்தோடு கேட்டார். சென்னைக்கு வந்தால் நிச்சயம் தன்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். திருமறைத் தீபத்தை அவருக்கு வாசிக்கும்படி கொடுத்தேன். (அதன்படி சென்னைக்கு போனபோது அவருடைய வீட்டுக்குப் போய் அங்கே அவரும் அவருடைய துணைவியாரும் அன்போடளித்த விருந்துபசாரத்தை பின்னால் அனுபவித்திருக்கிறேன். அப்போதும் அவர் எனக்கு சால்வை போர்த்தி மரியாதை செய்ய மறக்கவில்லை!)

அவ்வை நடராஜன் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது தான் வாசித்த யோவான் சுவிசேஷத்து தமிழ் இலகுவாக புரிந்துகொள்ள முடியாத தமிழில் இருப்பதாகத் தெரிவித்தார். தமிழ்ப் பேராசிரியரும், முன்னாள் துணை வேந்தருமல்லவா, அதை மறுத்தா சொல்ல முடியும்? தமிழ் வேதாகமத்தை நீங்கள் ஏன் நல்ல தமிழில் எழுதக்கூடாது என்று கேட்டார். தன்னைப் போன்ற கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அது பலனளிக்குமே என்றார். கிறிஸ்தவர்கள் அல்லாத மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய தமிழில் வேதாகமம் இருக்க வேண்டுமே என்றெல்லாம் அவர் சொன்னது என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. பலரும் இன்று தமிழில் பொதுவாகப் பயன்படுத்தி வரும் ஹென்றி போவரின் (Henry Bower) பழைய திருத்தப் பதிப்பைத் (O.V.) தவிர தமிழில் அநேக மொழிபெயர்ப்புகள் வந்திருந்தாலும் புதிய மொழிபெயர்ப்புகள் எதுவுமே நம்பக்கூடியளவுக்கு எழுத்துபூர்வமான மொழிபெயர்ப்புகளாக இல்லை. மொழிபெயர்ப்பில் மட்டுமல்லாமல் அவற்றில் இறையியல் தவறுகளும் அநேகம் காணப்படுகின்றன. பழைய திருத்தப் பதிப்பையே இன்றும் தமிழ் கிறிஸ்தவர்கள் பழக்க தோஷத்தால் பயன்படுத்தி வந்தபோதிலும் அதில் அளவுக்கு அதிகமான வடமொழி வாடையும், தற்காலத்தில் நடைமுறையில் அறவே பயன்படுத்தப்படாத வார்த்தைகளும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கும், புதிய கிறிஸ்தவர்களுக்கும் பெரும் இடையூராகவே இருக்கின்றன. அதைப் பயன்படுத்தி வருகின்ற தமிழ் கிறிஸ்தவர்களும் அதை எந்தளவுக்கு புரிந்துகொண்டு பயன்படுத்துகின்றார்கள் என்பது தெரியவில்லை. போதக ஊழியத்திலிருப்பவர்களுக்கும் அந்தத் தமிழ் தடையாகவே இருக்கின்றது. வெறும் வாக்குத்தத்த வசனங்களை மட்டும் சபையாருக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும் ஊழியக்காரர்களுக்கு தெளிவான தமிழ் வேதாகமம் அவசியமாயிருக்காது. வேதாகமப்

போதனைகளை ஆராய்ந்து சபையாருக்கு விளக்கிப் போதிக்கும் போதகர்களுக்கு நல்ல தமிழில் வேதாகமம் அவசியம் தேவை.

தமிழ் வேதாகமத்தில் எந்தவொரு வசனத்தை விளக்கிச் சொல்லுவதற்காக எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொரு முறையும் அதிலிருக்கும் நான்கு அல்லது ஐந்து வார்த்தைகளுக்கு தற்காலத் தமிழில் நான் விளக்கங் கொடுக்காமல் இருந்ததில்லை. அந்தளவுக்கு வடமொழித் தாக்கமும், புரிந்துகொள்ளக் கடினமான வார்த்தைகளும் நிறைந்திருக்கிறது. உதாரணத்திற்கு சில வார்த்தைகளைக் கவனியுங்கள்: அரோசிகம், நிணம், நொதிக்கிற, லகுவடைய, விக்கினம், பிழைப்பூட்டு, உள்ளிந்திரியங்கள், அவிழ்தங்கள், தவசம், சொஸ்தமாவான், அவமாக்கி, சங்கதி, பிரதியுத்தரமாக, பண்ணக்கடவது, அந்தகாரம், அசுசிப்படாமல், சிலாக்கியம், வர்த்தமானம், பெத்தரிக்கம், முகாந்திரம், அருக்களிப்பு, நிர்விசாரம், பலட்சயம், சாமாசி, பிராணன், பிரமாணம் என்று இப்படிப் பல வார்த்தைகளை உதாரணங் காட்டலாம். இவற்றையெல்லாம் நான் தேடித் தேடிப் பார்த்து தெரிவுசெய்யவில்லை. மேலெழுந்தவாரியாக பழைய, புதிய ஏற்பாடுகளை வாசிக்கும்போதே இத்தகைய வார்த்தைகள் எங்கும் பரவலாகக் காணப்படுவதைப் பார்க்கலாம். இவற்றில் சிலவற்றை ஓரளவுக்கு புரிந்துகொள்ள முடிந்தாலும் இவற்றைவிடக் கடினமான வார்த்தைகள் அநேகம் இருக்கின்றன. எசேக்கியேலில் 'பரிசுத்தக்குலைச்சல்' என்று ஒரு வார்த்தை இருக்கிறது. முதல் தடவையாக வேதாகமத்தை வாசிக்கின்ற எத்தனை பேரால் அதை விளங்கிக்கொள்ள முடியும்? தற்கால வாசகர்களால் புரிந்துகொள்ள முடியாத இவை போன்ற வார்த்தைகளைத் தவிர எழுத்து நடையும் கொச்சைத் தமிழில் இருப்பதைப் பார்க்கிறோம். உதாரணத்திற்கு, 'சரிக்கட்டுவேன்', 'வாய் சொல்லிற்று', 'மிதியுண்டுபோம்', 'இருண்டுபோம்', 'நடப்பிக்கட்டும்', 'தப்பவிடான்', 'சாவவே சாவாய்', 'படவு', 'இராத்திரி', 'சாயங்காலம்', 'தோய்த்து' என்பது போன்ற வார்த்தைப் பிரயோகங்களை அடிக்கடி பார்க்கிறோம். தமிழ் வேதாகமத்தை நான் இன்றும் ஆங்கில வேதாகமத்தை வாசித்தே விளங்கிக் கொள்ளுகிறேன். அந்தளவுக்கு வேதாகமத் தமிழ் வெளிநாட்டார் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இருந்த தமிழாக, வடமொழித் தமிழாகவும், நடைமுறையில் பயன்படுத்தப்படாததாகவும் இருக்கிறது. இதற்காக நல்ல தமிழ் வழக்கத்தில் இல்லாமல் இருக்கவில்லை. பாரதியாரும், பாரதிதாசனும் அந்தக் காலத்தில் வாழாமலா இருந்திருக்கிறார்கள்? அவர்கள் பேசி எழுதிய தமிழ் நல்ல தமிழ்தானே. அவருடைய தமிழைக் கவனியுங்கள்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி
பிறக்குது மூச்சினிலே

– பாரதியார்

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்

*தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!*
*தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*
*தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத்*
*தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!*

*– பாரதிதாசன்*

இலகு தமிழில் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று எழுதிப் பாடியிருக்கிறார்கள் பாரதியாரும் பாரதிதாசனும். தமிழில் வேதத்தை மொழிபெயர்த்தவர்களுக்கு துணை செய்ய நல்ல தமிழ் தெரிந்தவர்களின் துணை கிடைக்காமல் போயிருக்கிறது. அதுவும் மொழிபெயர்த்தவர்கள் எல்லோருமே பெரும்பாலும் வெளிநாட்டவர்களாக இருந்திருப்பதும் வேதத் தமிழ் நல்ல முறையில் இல்லாமல் போயிருப்பதற்கு காரணமாக இருந்திருக்கிறது. (இப்படிச் சொல்வதால் அவர்களுடைய தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் நான் அசட்டை செய்வதாக நீங்கள் தவறாக எண்ணிவிடக்கூடாது.) பின்னால் தமிழகத்தையும், ஸ்ரீ லங்காவையும் சேர்ந்த தமிழர்களின் பங்கு வேத மொழிபெயர்ப்பில் இருந்திருந்த போதும் தமிழ் எழுத்து நடை பெரிய மாற்றங்களுக்குள்ளாகாமலேயே இருந்திருக்கிறது.

மொழிக்கு இந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா? என்று நீங்கள் கேட்கலாம். மொழி வல்லமையான கருத்துப் பரிமாற்ற ஊடகம். அதைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. அதுவும் தமிழ் மொழி மிகவும் சிறப்பான உலக மொழிகளில் ஒன்று. இன்றைக்கு அதற்கு இந்தியாவில் செம்மொழித் தகுதி கிடைத்திருக்கிறது. சுதந்திரப் போராட்ட காலத்தில் பாரதியாரின் கவிதைகள் மக்களுக்கு புத்துயிரளித்து சுதந்திர தாகத்தை ஊட்டின. தமிழைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்த கட்சி தி.மு.க. கட்சி. மொழியின் பலத்தை இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். மொழியின் மூலமே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். காலத்துக்குக் காலம் மொழிகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு 1706ல் வந்த டேனிஷ் மிஷனரியான சீகன்பால்க் தரங்கம்பாடிக்கு வந்து ஊழியப் பணி செய்தபோது புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தார். அது இன்றும் தஞ்சாவூர் மியூசியத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தமிழை நம்மால் வாசித்துப் புரிந்துகொள்ள முடியாது. காரணம், தமிழ் எழுத்து வரி வடிவங்களில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு இன்று நாம் பயன்படுத்தும் எழுத்துக்கள் வித்தியாசமானவையாக இருக்கின்றன. அதுவும் அந்தக் காலத்தில் தமிழ் எழுத்துக்கு மேல் குத்து வைப்பது போன்ற குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவை பிற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்த காலத்தில் தட்டச்சு செய்வதற்கும், கணினிக்கும் வசதியாக ஒருசில எழுத்துக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இதையெல்லாம் கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியாது. இவை தவிர மக்கள் பயன்படுத்தும் தமிழ் எழுத்து நடையும் பேச்சு வழக்கும் பெரிதும் மாறியிருக்கின்றன. அதுவும் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கட்சியின் எழுச்சியால் இந்தியும்,

பிராமண ஆதிக்கமும் புறக்கணிக்கப்பட்டு, தனித் தமிழில் எழுதப் பேச வேண்டும் என்ற எண்ணப்போக்கால் கடந்த ஐம்பது வருடங்களில் தமிழில் வடமொழித் தாக்கம் (பிராமணத் தமிழ்) அறவே இல்லாமல் போயிருக்கிறது.

தமிழில் வேதம் மொழிபெயர்க்கப்பட்ட விதம் குறித்த ஒருசில குறிப்புகளை நாம் தெரிந்துகொள்வது இந்த இடத்தில் பயனளிக்கும். பதினெட்டாம் நூற்றாண்டில் புரட்டஸ்தாந்து மிஷனரியான சீகன்பால்க் (Ziegenbalg) தரங்கம்பாடிக்கு வந்து தமிழைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அதற்காக அவர் பெருமுயற்சிகள் செய்திருக்கிறார். அவருக்கு முன்பு ஸ்ரீ லங்காவில் ஊழியம் செய்திருந்த பால்தேயூஸ் என்ற ஒல்லாந்து தேசத்தவர், போர்த்துக்கேயர் மொழிபெயர்த்திருந்த தமிழையே அதிகம் பயன்படுத்தியதால் அந்தத் தமிழில் அவர் எழுதியிருந்த நூல்களில் தமிழ் நல்ல முறையில் இல்லை என்ற கருத்தைக் கொண்டிருந்த சீகன்பால்க் தமிழில் அக்காலத்தில் இருந்த நூல்களைக் கஷ்டப்பட்டு வாசித்து தமிழைக் கற்றுக்கொண்டார். செந்தமிழ் இலக்கியங்களைக்கூடக் கற்றுக்கொண்டார் என்று செய்தி இருக்கின்றது. இரண்டு வருடங்களில் நன்றாகத் தமிழ் கற்றுக்கொண்டு 1708ல் ஜெபத்தோடு தமிழில் வேதத்தை மொழிபெயர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டார். இது சாதாரண முயற்சியல்ல. அப்போது தமிழில் வேதம் இருக்கவில்லை. அதை எவரும் மொழிபெயர்க்க முற்படவில்லை. சீகன்பால்க் இதுவரை யாரும் செய்திராத இந்தப் பணியை முதன் முறையாகத் தனியாகவே செய்ய வேண்டியிருந்தது. அவர் காலத்தில் தென்னிந்தியாவிலோ அல்லது இந்தியாவின் வேறெந்தப் பகுதியிலோ புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ ஊழியங்களும் நிகழவில்லை. இந்த நிலையில் வெளிநாட்டாரொருவர் தமிழில் வேதத்தை மொழிபெயர்ப்பதென்பது சாதாரணப் பணியல்ல. வேதத்தில் காணப்பட்ட மூல வார்த்தைகளுக்கு தமிழில் வார்த்தைகளை எவரும் உருவாக்கியிருக்கவில்லை. ரோமன் கத்தோலிக்கர் எழுதி வெளியிட்டிருந்த சில நூல்களைத் தவிர வேறு நூல்களும் இருக்கவில்லை. இரண்டரை வருடங்களுக்குள் சீகன்பால்க் புதிய ஏற்பாட்டில் சில பாகங்களை முடித்திருந்தார். புரட்டஸ்தாந்து சீர்திருத்த கிறிஸ்தவ ஊழியம் தமிழ்நாட்டில் ஆரம்பித்து ஒன்பது வருடங்களுக்குள் புதிய ஏற்பாடு தமிழில் வெளிவந்திருந்தது.

சீகன்பால்க் அன்று தமிழில் பயன்படுத்தியிருந்த சில வார்த்தைகளைக் கவனியுங்கள். கடவுளை அவர் 'சருவேசுரன்' என்றும், நித்திய ஜீவனை 'நித்திய சீவன்' என்றும், உலகத்தை 'லோகம்' என்றும், ஒரேபேரான என்பதை 'தமக்கொண்ணான' என்றும், அன்பை 'சினேகம்' என்றும், தேவர் என்பதை 'சமமனசு' என்றும் மொழிபெயர்த்திருந்தார். சீகன்பால்க்கினுடைய மொழிபெயர்ப்பை வாசிக்கும்போது அவருடைய தமிழ் கொச்சைத் தமிழாய் அதாவது பேச்சுத் தமிழாய் இருப்பதைக் கவனிக்கிறோம். உதாரணத்திற்கு, கொடுத்தாலும் என்பதை அவர் 'குடுத்தாலும்' என்று எழுதியிருந்தார். இதற்குக் காரணமில்லாமல் இருக்கவில்லை. அவர் தமிழ் கற்றுக்கொள்ளும்போது புலவர்களை வைத்துப் படித்திருந்தாலும், படித்த பிராமணர்களோடும், பண்டிதர்களோடும் பேசிப் பழகியிருந்தாலும்

அவருடைய ஊழியம் பெரும்பாலும், பாமர மக்கள் மத்தியில் அதுவும் கொச்சைப் பேச்சுத் தமிழைக் கொண்டிருந்த சாதாரண மனிதர்கள் மத்தியில் இருந்ததால் சுவிசேஷத்தை அறிவிக்கும் நோக்கத்தோடு அந்தத் தமிழிலேயே வேதத்தை மொழிபெயர்த்திருந்தார். அந்தப் பாமரர்களுக்கு வேதம் புரிய வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே அவருக்கிருந்திருக்கிறது. அவர்கள் பேசிய தமிழே அவருக்கும் சரளமாக வந்தது. நம்மையெல்லாம் மனதில் வைத்து சீகன்பால்க் அன்று வேத மொழிபெயர்ப்பில் ஈடுபடவில்லை, ஈடுபட்டிருக்கவும் வழி இல்லை. உண்மையில் மிகவும் கடுமையான, சவாலான, யாரும் அதுவரை செய்திராத ஒரு பணியைத் தனிமனிதனாய் பல துன்பங்களுக்கு மத்தியில் அர்ப்பணத்தோடு அவர் செய்து முடித்ததே அவருடைய ஊழியத்தின் அருஞ் சாதனை.



**சீகன்பால்க் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட புதிய ஏற்பாட்டின் ஒரு பக்கம்**

அவருக்குப் பின்வந்த ஜெசுயிஸ்ட் (Jesuist) ரோமன் கத்தோலிக்க துறவியான கொன்ஸ்ரன்டைன் பெஸ்கி, 1710ல் மதுரைக்கு வந்தார். இவர் தமிழில் அதிக பாண்டித்தியம் பெற்றவராயிருந்தார். தமிழ் காப்பியமான 'சிந்தாமணி'யைப் போல இவர் எழுதிய 'தேம்பாவணி' என்னும் காப்பியம் சிறப்பானது. இதன் அரங்கேற்றத்தின்போது அவருடைய தமிழ்ப் பாண்டித்தியம் காரணமாக 'வீரமாமுனிவர்' என்ற பட்டம் அவருக்கு மதுரையில் கொடுக்கப்பட்டது. இவர் அகராதியொன்றையும் 'சதுரகராதி' எனும் பெயரில் தொகுத்திருந்தார். அதுவே பிற்காலத் தமிழ் அகராதிகளுக்கு ஆதாரமாக இருந்தது. இவருடைய தமிழ் வடமொழி கலந்த (பிராமணத்) தமிழாக இருந்தபோதும் நல்ல இலக்கியத் தமிழாக இருந்தது. இருந்தாலும் இவர் வேதத்தை மொழிபெயர்க்க எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. ரோமன் கத்தோலிக்க மதத்துறவியொருவர் அதைச் செய்யும்படி எதிர்பார்ப்பதும் தவறுதான். சீகன்பால்க்கினுடைய மொழிபெயர்ப்பின் தமிழ் நடையை வீரமாமுனிவர் சிரித்து ஏளனஞ் செய்திருக்கிறார். (கத்தோலிக்கரான வீரமாமுனிவருக்கு புரட்டஸ்தாந்தியர்களைப் பிடிக்காமல் இருந்ததும் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கிறது.) ரோமன் கத்தோலிக்க துறவிகள் மக்களை மதம் மாற்றுவதற்கு செய்த முக்கியமான காரியங்களில் ஒன்று அவர்களுடைய மொழியிலும் பழக்க வழக்கங்களிலும் பாண்டியத்துவம் அடைந்து அவர்களைப் போல நடந்துகொள்ள முயல்வதுதான். இதன் காரணமாக பல ரோமன் கத்தோலிக்க மதத்துறவிகள் தமிழறிவில் சிறந்தவர்களாயிருந்ததில் ஆச்சரியமில்லை. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடமிருக்கிறது. மக்களுடைய மொழியில் நாம் தேர்ச்சி பெறுவது சுவிசேஷமும், சத்தியமும் அவர்களிடம் போய்ச் சேரப் பேருதவி செய்யும். இந்த விஷயத்தில் சீகன்பால்க்கினுடைய நிலையையும் எண்ணிப் பார்ப்பது அவசியம். நல்ல தமிழில் இல்லாமல் பேச்சுத் தமிழில் அவர் வேதத்தை மொழிபெயர்த்த காரணம் அவர் ஊழியம் செய்த மக்கள் அந்த முறையில் பேசியதால்தான். அவர்களுக்காகவே அவர் மொழிபெயர்ப்பை ஆரம்பித்திருந்தார். வீரமாமுனிவருடைய இலக்கியத் தமிழில் சீகன்பால்க் அன்று வேதத்தை மொழிபெயர்த்திருந்தால் அவர் ஊழியம் செய்த மக்களுக்கு அது புரிந்திருந்திருக்காது. சீகன்பால்க்கின் வேதத் தமிழ் நடை பாமரத் தமிழில் இருந்த போதும் அவருடைய மொழிபெயர்ப்பு உண்மையானதாக இருந்தது. மூலத்தோடு ஒத்ததாக யதார்த்தமாக இருந்தது. ஒரு தனி மனிதன் இந்தளவுக்கு உழைத்திருந்தது பெரிய காரியந்தான். எது எப்படியிருந்தபோதும் வேத மொழிபெயர்ப்புகள் நிச்சயம் மூலமொழிகளில் இருப்பதுபோல் கருத்துச் சுத்தத்தோடு அமைந்திருப்பதோடு, மொழிபெயர்க்கப்படும் மொழியின் சமகால இலக்கிய, இலக்கண அமைப்பிலும் சிறப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

சீகன்பால்க்கிற்குப் பிறகு அநேகர் வேத மொழிபெயர்ப்பில் ஈடுபட்டு இறுதியில் இன்றைக்கு எல்லோரும் பொதுவாகப் பயன்படுத்தும் பழைய திருப்புதல் (O.V.) தமிழில் நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த விதத்தில்

மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டவர்களில் பிலிப் டீ மெல்லோ (Philip De Mello), யொகான் பெப்ரீசியஸ் (Johann Febricius), சார்ள்ஸ் ரேனியஸ் (Charles Rhenius), பீட்டர் பேர்சிவல் (Peter Percival), ஹென்றி போவர் (Henry Bower) ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறலாம். மொழிபெயர்ப்பு பற்றிய அனைத்து விபரங்களையும் இந்த ஆக்கத்தில் எழுதுவது என்பது முடியாத காரியம். ஆரம்பத்தில் இருந்த மொழிபெயர்ப்பின் தமிழில் மாற்றங்களைக் கொண்டுவந்தவர்களில் சிறப்பானவராக சார்ள்ஸ் ரேனியஸ் (Charles Rhenius) என்பவரைக் குறிப்பிடலாம். இவர் தமிழ்ப்புலமையில் வீரமாமுனிவருக்கு சமமாகக் கருதப்பட்டவர். இவர் வெளிச்சத்தை 'ஒளி' என்றும், சினேகத்தை 'அன்பு' என்றும், ஓசை தரும் கிண் கிணி என்பதை 'ஓசை தரும் கைத்தாளம்' என்றும், நம்புகிற காரியங்களில் திட அஸ்திபாரம் என்றிருந்ததை 'நம்பப்படுகிறவைகளில் உறுதி' என்றும் பல நல்ல மாற்றங்களை மொழி நடையில் கொண்டு வந்தார். இவர் ஜெர்மனியில் பிறந்தவர். 1814ல் இந்தியாவுக்கு வந்து சர்ச் மிஷன் சங்கத்தின் (C.M.S.) கீழ் ஊழியம் செய்தார். இவர் மொழி நடையில் நல்ல மாற்றங்களை செய்திருந்தபோதும், மொழிபெயர்ப்பில் அதேவித அக்கறையை எல்லாப் பகுதிகளிலும் காட்டவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. இவருக்குப் பிறகு தொடர்ந்தும் தமிழ் மொழிபெயர்ப்பில் பலரும் ஈடுபட்டிருந்தபோதும் இன்றுவரை தமிழ் நடையில் காலத்துக்கேற்ற அவசியமான மாற்றங்கள் செய்யப்படாத நிலையிலேயே தமிழ் வேதம் தொடர்ந்தும் வடமொழித் தாக்கமுள்ளதாக, இலக்கியத் தரத்தில் குறைவானதாக இருக்கிறது. பொதுவாக உலகமெங்கும் அனைத்து தமிழர்களும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வேதாகமம் இருப்பதானால் இன்றைக்குப் பயன்படுத்தப்படும் தமிழில் அந்த மொழிபெயர்ப்பு இருப்பது அவசியம் என்பதை மறுக்க முடியாது.

தமிழ் கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியினர் வேதாகமத் தமிழை கிறிஸ்தவ தமிழாகப் பார்க்கிறார்கள். அதை ஒருவித பரலோக மொழி போல் கருதுகிறார்கள். அவர்களுடைய ஜெபமும், எழுத்தும்கூட வேதாகமத் தமிழில் இருப்பதைப் பார்க்கலாம். அவர்கள் வேதாகமத் தமிழை தெய்வீகம் பொருந்தியதாகக் கருதுகிறார்கள். அதனால் அந்தத் தமிழில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கிறது. அந்தத் தமிழை அவர்கள் நடைமுறையில் பயன்படுத்தாவிட்டாலும் அதையே வாசித்துப் பழகிப்போயிருப்பதால் அதை விட அவர்களுக்கு மனதில்லை. தமிழகத்தில் இந்திய வேதாகம இலக்கிய நிறுவனம் (India Bible Literature) ஆங்கிலமும் தமிழும் இணைந்த வேதப் புத்தகமொன்றை வெளியிட்டது. இது கிங் ஜேம்ஸ் ஆங்கில மொழிபெயர்ப்பை (King James Version) மூலமாகக் கொண்டு பழைய திருத்தப் பதிப்பில் காணப்பட்ட புரிந்துகொள்ள முடியாத வார்த்தைகளுக்கு மட்டும் தற்கால வார்த்தைகளைக் கொடுத்து வெளியிடப்பட்டது. இருந்தபோதும் அதிலும் வடமொழித்தாக்கம் அப்படியே இருந்தது. உதாரணத்திற்கு பழைய திருத்தப்பதிப்பில் யோவான் 1:1, 'ஆதியிலே வார்த்தை இருந்தது' என்றிருக்கிறது. இந்திய வேதாகம இலக்கிய மொழிபெயர்ப்பில் அது

'துவக்கத்திலே வார்த்தை இருந்தது' என்றிருக்கிறது. பிறமொழித்தாக்கமே இல்லாமல் தமிழ் எழுதிவிட முடியாது. எல்லா மொழிகளிலுமே ஏனைய மொழிகளில் இருந்து வந்த சொற்களும், சொற்பிரயோகங்களும் இருக்கும். ஆனால், அவசியமான அளவுக்கு தேவையான இடங்களில் மட்டுமே அவை பயன்படுத்தப்பட வேண்டும். இந்திய வேதாகம இலக்கிய நிறுவனத்தின் இந்தப் புதிய மொழி பெயர்ப்பில் தமிழில் முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு மட்டுமே மாற்றங்கள் செய்திருக்கிறார்கள். பழைய திருத்தப் பதிப்பில் இருந்த நடைமுறையில் பயன்படுத்தப்படாத வார்த்தைகளை அகற்றிவிட்டு வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். 'நியாயப் பிரமாணம்' இதில் 'நியாயவிதிகள்' என்றிருக்கிறது. 'அதிசயப்பட வேண்டாம்' என்ற பதங்கள் 'வியப்படைய வேண்டாம்' என்று மாறியிருக்கிறது. 'நித்திய ஜீவன்' என்பது 'நித்திய வாழ்வு' என்று மாறியிருக்கிறது. இருந்தபோதும் இந்தப் பதிப்பு அதிகம் விற்பனையாகாததால் அடுத்த பதிப்பிற்கு பழைய திருத்தப் பதிப்பையே (O.V.) மாற்றங்கள் செய்யாமல் மறுபடியும் பயன்படுத்தப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். வாசித்துப் பழகிப்போன பழைய திருத்தப் பதிப்பை விடுவதற்கு நம் மக்களுக்கு மனதில்லை. இந்தவிதத்தில் ஒரு மொழிபெயர்ப்பை தெய்வீகத் தன்மையுடையதாகக் கருதிப் பயன்படுத்த கர்த்தர் வேதாகமத்தை நமக்குத் தரவில்லை. மூலமொழியில் ஆரம்பத்தில் கர்த்தர் தந்த வேதப் பிரதிகளே தெய்வீகத் தன்மை கொண்டவை. அந்தப் பிரதிகள் இன்று நம்மிடம் இல்லை. அதிலிருந்து எடுத்த பிரதிகளிலிருந்தே மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. செய்யப்பட்டிருக்கும் மொழி பெயர்ப்புகளை நிச்சயம் நாம் நம்பலாம்; அவை நல்ல மொழிபெயர்ப்பு களாக இருந்தால் மட்டும். மூல மொழியில் இருந்த அர்த்தத்தில் இருந்து எந்தவிதத்திலும் மாறாமலும், தவறுகள் இல்லாமலும் அதே நேரம் தற்கால மொழிநடையில் விளங்கிக் கொள்ளும்படியும் மொழிபெயர்ப்புகள் இருக்க வேண்டும். அதுவே ஒரு வேதாகம மொழிபெயர்ப்பை சிறப்பானதாக்குகிறது. அப்படி இருக்கும்போதே அதைக் கர்த்தருடைய வார்த்தையாக நம்மால் நம்பி ஏற்றுக்கொள்ள முடியும். அதற்கு மேல் ஒரு குறிப்பிட்ட மொழிபெயர்ப்பிற்கு மட்டும் தெய்வீக அந்தஸ்தைக் கொடுக்கக்கூடாது. இன்றைக்கு வாழ்கின்ற தமிழனால் படித்துப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கும் எதனாலும் அவனுக்குப் பயனில்லை. இன்று தமிழ் பேசி வாழ்ந்து வருகிறவர்கள் தடையில்லாமல் புரிந்துகொள்ளும்படி அவர்களுக்குப் பரிச்சயமான மொழியில் வேதாகமம் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. அவ்வை நடராஜன் அவர்களும் அதைத்தானே சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தமிழ் கிறிஸ்தவர்களும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறியாத தமிழ் மக்களும் வாசித்துப் பயனடையும் விதத்தில் நல்ல தமிழில் வேதாகமம் இருக்க வேண்டிய அவசியத்தை யாரால் மறுக்க முடியும்? அதற்கு தடையாக இருப்பது என்ன என்பதைப் பற்றி சிந்திக்கத்தான் வேண்டும்.

1. *எபிரெயம், கிரேக்கம், ஆங்கிலம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் பாண்டியத்தியம் பெற்ற தமிழர்கள் இந்தப் பணிக்குத் தேவை. இந்த நான்கு மொழிகளிலும் அவர்களுக்கு நல்லறிவும், நடைமுறைப் பயிற்சியும் இருக்க வேண்டும். அத்தகைய திறமை வாய்ந்தவர்கள் நம்மத்தியில் தற்காலத்தில் இருக்கிறார்களா என்பது சந்தேகம் தான்.*

2. *இந்தப் பணியைத் தனியொரு மனிதனால் செய்துவிட முடியாது. அதற்கு ஒரு குழு சேர்ந்து செயல்பட வேண்டும். பல படிகளில் மொழிபெயர்ப்பு பணி நடக்க வேண்டியிருப்பதால் பல ஆண்டுகளுக்கு அர்ப்பணிப்போடு அந்தப் பணியை செய்யக்கூடியவர்கள் தேவை.*

3. *தமிழ் மொழி, தமிழகத்திலும் அதற்குப் புறத்தில் ஸ்ரீ லங்கா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பேசப்பட்டு வருவதால் இந்நாடுகளைச் சேர்ந்த தமிழில் இலக்கண, இலக்கிய பாண்டித்தியமுள்ளவர்களும் இந்தப் பணிக்கு தேவைப்படுகிறார்கள். எந்த மொழிபெயர்ப்பும் இலக்கண, இலக்கிய சுத்தத்தோடிருப்பது அவசியம்.*

4. *ஏற்கனவே இருக்கும் சில மொழிபெயர்ப்புகள் இறையியல் கோளாறுள்ளவையாக இருக்கின்றன. அதாவது, மொழி பெயர்த்தவர்கள் தங்களுக்குப் பிடிக்காத இறையியல் போதனைகளை மொழிபெயர்ப்பின்போது மாற்றியமைத்திருக் கிறார்கள் அல்லது மொழி பெயர்ப்பில் இணைத்திருக்கிறார்கள். இந்தத் தவறு நடக்காமல் இருக்க, சுவிசேஷ இயக்கத்தைச்* (Evangelical) *சேர்ந்த தெளிவான, பாரபட்சமற்ற இறையியல் வல்லுனர்கள் இந்தக் குழுவில் பணியாற்றி அத்தகைய தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியம்.*

5. *எழுத்து நடையைவிட பேச்சுத் தமிழ் எப்போதும் தமிழ் பேசும் நாடுகள் அனைத்திலும் வித்தியாசமாகத்தான் இருக்கும். தமிழகத்தில் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபட்டிருக்கும். சகல நாடுகளிலும் உள்ளவர்கள் இடையூறில்லாமல் வாசித்துப் பயன்படக்கூடிய விதத்தில் பேச்சுத் தமிழாகவோ, கொச்சைத் தமிழாகவோ, கடுந்தமிழாகவோ இல்லாமல் நல்ல நடைமுறைத் தமிழில் வேதாகமம் அமையக்கூடிய விதத்தில் அதன் மொழி நடை இருக்குமாறு பார்த்துக்கொள்ளக்கூடிய தமிழ் வளம் உள்ளவர்களும் இந்தப் பணிக்குத் தேவை.*

*இத்தனையும் இருந்து அர்ப்பணிப்போடு இந்தப் பணியில் ஈடுபடுவ தால் மட்டுமே நல்ல தமிழில் நமக்கு வேதாகமம் கிடைக்க முடியும். அது நடக்குமா? அந்தக் காலமும் வருமா?*

(இந்த ஆக்கத்தின் சில குறிப்புகளுக்கு 'கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு' என்ற குலேந்திரன் சபாபதி, 1967ல் எழுதிய நூல் உதவியாக இருந்தது.)

# பிரசங்கத்தில் கிறிஸ்தவத் தமிழ்!

தமிழில் பிரசங்கிக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இறையியல் போதனைகளைத் தெளிவாகக் கொடுக்கிற தமிழ் பிரசங்கிகளின் தொகை மிகக் குறைவு என்பது நமக்குத் தெரியும். அந்தக் குறை நிவர்த்தியாக வேண்டும் என்பது என்னுடைய நீண்ட கால விருப்பம் என்பதை திருமறைத்தீபம் வாயிலாகப் பல தடவைகள் தெரிவித்திருக்கிறேன். இந்த ஆக்கத்தில் அதைப் பற்றி மறுபடியும் கருத்துத் தெரிவிக்க நான் விரும்பவில்லை. இதில் தமிழில் பேசிப் பிரசங்கிப்பதைப் பற்றி மட்டும் விளக்க விரும்புகிறேன். அதுவும் இலகு தமிழில் மக்கள் கேட்டுப் புரிந்துகொள்ளும் வகையில் பேசிப் பிரசங்கிப்பதைப் பற்றியே வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒரு சிறப்பு வைபவத்தில் கலந்துகொள்ள எனக்கு அழைப்புக் கிடைத்தது. அந்த வைபவத்தில் ஒரு செய்தி கொடுக்கப்பட்டது. பேசியவர் அரைமணி நேரம் செய்தி கொடுத்தார். கூட்டத்தில் ஒருவனாக இருந்து அந்த செய்தியை நானும் கேட்டேன். பொதுவாகவே இன்றைய கூட்டங்களில் தரமான கிறிஸ்தவ செய்திகளைக் கேட்க வழியில்லை, ஆனால், அன்று அவருடைய செய்தியில் வேதசத்தியங்கள் நல்ல முறையில் விளக்கப்பட்டன. கூட்டத்திற்கு வந்திருந்த கிறிஸ்தவர்களுக்கும் அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்த சத்தியங்களை நினைவுபடுத்திக்கொள்ள அந்தச் செய்தி நிச்சயம் துணை செய்திருக்கும். அன்று அநேக இந்துக்களும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஆனால், கூட்டத்தில் ஒருவனாக இருந்த என்னை ஏதோ உறுத்தியது. என்னால் இருக்கையில் அமைதியாக இருக்க முடியாதளவுக்கு அந்த உறுத்துதல் இருந்தது. என்னவென்று யோசித்துப் பார்த்ததில் அது செய்தி சம்பந்தமானது என்பதை என்னால் உணர முடிந்தது. செய்தியில் எந்தவிதமான தவறுமே இல்லை. அது கிறிஸ்தவ செய்திதான். கிறிஸ்தவர்களுக்கு பயனுள்ளதுதான். ஆனால், என் உறுத்துதல் செய்தி கொடுக்கப்பட்ட மொழிநடை சம்பந்தமானது.

அன்று அந்தக் கூட்டம் ஒரு பொது மண்டபத்தில் நடந்தது. கூட்டத்திற்கு இருநூறுக்கு மேற்பட்டவர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் எண்பது வீதத்துக்கு மேல் சபை வாசலைக் கால் வைத்தும் பார்த்திராத இந்துக்கள். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் அழைப்புக்கொடுத்ததால் அநேகர் வந்திருந்தார்கள். என்ன நோக்கத்தோடு வந்தார்களோ தெரியாது. இவர்கள் எல்லோருமே கிறிஸ்தவம் என்று ஒரு மதமிருக்கிறது என்பதை

மட்டுமே தெரிந்துவைத்திருக்கிறவர்கள். அவர்கள் இதுவரை கிறிஸ்தவ சுவிசேஷத்தையோ, கிறிஸ்தவ செய்தியையோ கேட்டிருந்திருப்பார்கள் என்பது சந்தேகந்தான். அவர்களுக்கு சபையைப் பற்றியோ, வேதத்தைப் பற்றியோ, சுவிசேஷத்தைப் பற்றியோ, இரட்சிப்பைப் பற்றியோ, கிறிஸ்தவர்கள் அன்றாடம் யோசிக்க அவசியமில்லாமல் பயன்படுத்தி வருகின்ற எத்தனையோ கிறிஸ்தவ வார்த்தைப் பிரயோகங்களைப் பற்றியோ ஏன், ஜெபத்தைப் பற்றியோ கூட ஒன்றுமே தெரிந்திருக்காது. ஏதோ, கிறிஸ்தவ கூட்டம் நடக்கிறது, நம்மையும் கூட்டத்திற்கு அழைத்திருக்கிறார்கள், முடிகிற போது நிச்சயம் ஏதாவது சாப்பிட இருக்கும், சாப்பிட்ட கையோடேயே போய் விடலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் வந்திருப்பார்கள். அவர்களில் ஒருசிலராவது, சரி கிறிஸ்தவ செய்தியையுந்தான் கேட்டுப் பார்ப்போமே என்ற எண்ணத்தில் வந்திருப்பார்கள். இந்துக்களான இவர்கள் அன்றாடம் பேசுகின்ற தமிழும் மாவட்டத்துத் தமிழாக, பேச்சுவழக்கு தமிழாகத்தான் இருக்கும். அவர்கள் அன்றாடம் காதால் கேட்கின்ற தமிழும், அவர்களைப் போன்றவர்கள் பேசுகிற தமிழும், டி.வியில் கேட்கக்கூடிய தமிழாகத்தான் இருக்கும். அவர்கள் வாசிக்கின்ற தமிழ் தினகரன், தினமணி, தினத்தந்தி போன்ற பத்திரிகைகளிலும் நக்கீரன், இந்தியா டுடே போன்ற வார, மாத இதழ்களில் வருகின்ற தமிழ்தான். இவர்களுக்கு கிறிஸ்தவர்களுடைய பேச்சும், பாஷையும் அந்நியர்களுடைய பாஷையாகத்தான் தென்படும். தமிழ் வேதாகமத்தின் தமிழும் இவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் தமிழைவிட மிகவும் வித்தியாசமானதொரு தமிழ். இவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் அவர்கள் பேசுகின்ற சிந்திக்கப் பயன்படுத்துகின்ற மொழியைப் பொறுத்தவரையில் நீண்ட இடைவெளி இருக்கின்றது.

இந்தக் கூட்டம் அன்றைக்கு கேட்ட பிரசங்கத்தைப் பற்றி என்ன நினைத் திருக்கும் என்று எண்ணிப் பார்க்கிறேன். சாதாரணமாக அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் கூட்டம் நடந்துகொண்டிருந்தாலும் பக்கத்தில் இருப்பவரோடு இரண்டு வார்த்தை பேசுவதும், சந்தர்ப்பம் கிடைத்தால் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே ஒரு எட்டு வெளியில் போய் புகையிலை போட்டுவிட்டோ, சிகரெட் பிடித்துவிட்டோ வருவதுதான். இங்கே ஒரு மணி நேரம் உட்கார வைத்து ஒருவரையும் பேச அனுமதிக்காமல் ஒரே மனிதர் அரை மணி நேரம் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சைப் பற்றி அவர்களுடைய மனதில் எத்தகைய எண்ணங்கள் ஓடியிருக்கும் என்று நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? பிரசங்கம் ஆரம்பித்து ஐந்து நிமிடமானவுடனேயே பிரசங்க மொழி அவர் களுக்கு அந்நியமாகப்பட்டிருக்கும். கிறிஸ்தவ மயமான தமிழை அவர்கள் கேட்டுப் பழக்கப்பட்டிராததால் சொல்லப்படுகிற செய்தி கூட்டத்திலிருக்கிற கிறிஸ்தவர்களுக்குத்தான் என்ற தீர்மானத்துக்கு உடனடியாக வந்திருப் பார்கள். தங்களுடைய வேலை, மரியாதைக்காக அமைதியாக இருந்துவிட்டு போவதுதான் என்று நினைத்து, எப்போது செய்தி முடியும் என்றிருந்திருப் பார்கள். அதனால் அவர்களுடைய கவனமும் பிரசங்கத்தின்போது எங்கோ இருந்திருக்கும். பிரசங்கத்தின் ஆரம்பத்திலேயே பாரம்பரிய இந்துக்களான அவர்களை பிரசங்கியார் இழந்துவிட்டார். பிரசங்கிப்பவருக்கும்

*அவர்களுக்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளி உருவாகிவிட்டது. எத்தனை அருமையான செய்தி அந்தப் பிரசங்கத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும் அது தங்களுக்கில்லை, கிறிஸ்தவர்களுக்குத்தான் என்று அவர்கள் முடிவெடுத்துவிட்டதால் அது அவர்களுக்குப் பயனில்லாமல் போய்விடுகிறது. சாதாரணமாக சபையைவிட்டு ஒதுங்கி நிற்கும், சபை வாசலையும் மிதித்தும் பார்த்திராத அந்த இருநூறுக்கு மேற்பட்ட இந்துக்களுக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் நல்லது செய்திருக்கக்கூடிய அருமையான சந்தர்ப்பம்* (Golden opportunity) *கைநழுவிப் போய்விட்டிருக்கிறது.*

*கிறிஸ்தவர்களுக்கு மட்டும் பிரசங்கிப்பதும், ஆராதனையில் ஈடுபடுவதும் மட்டும் சபையின் பணி அல்ல. சபை சமுதாயத்து மக்களுக்கு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி, அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி சுவிசேஷத்தை சொல்ல வேண்டிய பணிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்று தமிழ் சபைகள் இந்தப் பணியை மறந்துவிட்டனவோ என்று நினைக்கத் தோன்று கிறது. நிச்சயமாக தமிழ் சபைகளில் கிறிஸ்தவர்களுக்கான ஆராதனை நடக்கின்றது. அதிக ஜெபக்கூட்டங்கள் நடக்கின்றன. சுவிசேஷக் கைப்பிரதி களைக்கூட விநியோகம் செய்கிறார்கள். இதெல்லாம் பாராட்ட வேண்டிய அம்சங்கள்தான். இவை பற்றியதல்ல என்னுடைய பிரச்சனை. நாம் வாழுகின்ற, நம்மைச் சுற்றியிருக்கின்ற தொடர்ந்து சிலை வணக்கத்தில் ஈடுபட்டு வரும், நம்மைவிட வித்தியாசமான சிந்தனைகளைக் கொண்டிருந்து, நாம் பேசுகின்ற கிறிஸ்தவ தமிழைவிட வித்தியாசமான தமிழைக் கையாண்டு வரும் நம்மினத்தைச் சார்ந்த மக்களுக்கும் நமக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருப்பதுதான் என்னைப் பெரிதும் உறுத்துகிறது. இந்த இடைவெளி நம்முடைய நம்பிக்கைகளில் இருக்கத்தான் செய்யும். நாம் விசுவாசிப்பது மெய்யான கர்த்தரை அல்லவா! ஆனால், இந்த இடைவெளி சாதாரணமாக நாம் சமுதாயத்து மக்களோடு பழகுகிற விதத்திலும், பேசுகிற முறையிலும், நம் மொழியே அவர்களுக்குப் புரியாதவிதத்திலும் இருப்பதுதான் என்னுடைய பிரச்சனை. இது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுவிசேஷப் பணியைச் செய்வதில் நாம் பெருங் குறைபாட்டோடு அந்த உணர்வே இல்லாமல் இருக்கிறோமோ என்று என்னைத் பரிதவிக்கச் செய்கிறது.*

*நாம் பயன்படுத்துகிற கிறிஸ்தவ பதங்களைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். கர்த்தர், தேவன், விசுவாசம், அவிசுவாசம், இரட்சிப்பு, பாவம், அபிஷேகம், சுவிசேஷம், வாக்குத்தத்தம், ஜெபம், பரிசுத்தம், பிரசன்னம், நித்திய ஜீவன், ஆக்கினைத் தீர்ப்பு, நியாயப் பிரமாணம், நியாயத் தீர்ப்பு, கிருபை, கிரியை, சடங்காச்சாரியம், ஈவு, பொல்லாங்கன், மனுஷகுமாரன், தேவ குமாரன், மறுபிறப்பு என்று இன்னும் இவை போன்ற எத்தனையோ வார்த்தைகளை சரளமாக, சிந்தித்துப் பார்க்க அவசியமில்லாமல் பேச்சிலும், பிரசங்கங்களிலும், ஜெபத்திலும் கொட்டித் தீர்த்துவிடுகிறோம். கல்லை வணங்கி, நெற்றியில் விபூதி துலங்க சாதாரணப் பேச்சுத் தமிழும், வேட்டி சட்டையுமாக நம்மைச் சுற்றி அன்றாடம் வலம் வந்துகொண் டிருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு இவை கொஞ்சமும் புரியுமா? இல்லா விட்டால் சர்ட், பேன்ட்டோடு டூவீலரில் ஏறி ஆபிசுக்குப் போகும் வழியில்*

இருக்கின்ற பிள்ளையார் கோயிலைப் பார்த்து, டூவீலரில் இருந்தபடியே கன்னத்தில் போட்டுக் கொள்ளும் ஆங்கிலம் சிறிதும் தமிழ் சிறிதும் கலந்த தங்கிலீஷ் பேசும் கோடிக்கணக்கான சென்னைவாசிகளுக்கு இவை புரியுமா? கண்கூட சரியாகத் தெரியாத வயதான இந்து மூதாட்டியொருவர் என்னைப் பார்த்து, 'ஐயா, ஒஞ் சாமிக்கிட்ட எனக்காக கொஞ்சம் வேண்டிக்கப்பா!' என்று எதையோ நினைத்து தனக்கு ஆறுதல் வேண்டுமென்று கேட்கும்போது அந்த மூதாட்டியிடம் இந்த வார்த்தைகளை நான் எப்படிப் பயன்படுத்தி எதைப் புரியவைக்கப் போகிறேன். 'சட்டுனு ஏறிக்க, எங்க போகனும்' என்று மரியாதையில்லாமல் (நமக்கு அப்படித் தோன்றும்) பேசுகின்ற அன்றாடம் காய்ச்சிகளான பல்லாயிரக்கணக்கான ஆட்டோவாசிகளிடம் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்த முடியுமா? இதேபோல்தான் ஸ்ரீ லங்காவில், கொழும்பிலும் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் இருக்கிற இந்துக்கள் வித்தியாசமான பேச்சையும், பழக்க வழக்கங்களையும் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு சுவிசேஷத்தை சொல்லி இயேசுவிடம் வரும்படி எப்படி நம்ப வைக்கப் போகிறோம்? நான் என்ன சொல்லிக்கொண்டு வருகிறேன் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

நம்மில் பலருக்கு இது பிரச்சனையாகவே தெரியவில்லை. 'சுவிசேஷத்தையும் கிறிஸ்துவையும் மக்களை நம்ப வைப்பது பரிசுத்த ஆவியானவருடைய வேலை. அதனால், நாம் எதைப் பற்றியும் கவலைப்படாமல், மக்களுக்கு வார்த்தைகளின் அர்த்தம் தெரிகின்றதோ இல்லையோ அவற்றைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பது மட்டுந்தான் நம் வேலை' என்று எந்தக் கவலையும் இல்லாமல் தாம் செய்வது சரிதான் என்ற நம்பிக்கையில் அநேகர் ஊழியம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்தப் பிரச்சனை பற்றிய உணர்வே இல்லை. இது எத்தனை பரிதாபம்! இந்த உலகத்தில் வாழ்ந்தபோது இயேசு என்ன செய்தார் தெரியுமா? சாதாரண மக்களுடைய பாஷையில் அவர்களுக்குப் புரிகிற விதமாகப் பேசி ஊழியம் செய்தார். மலைப் பிரசங்கத்தில் மத்தேயு 6:19-34 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். தமிழ் வேதாகமத்தில் இந்த வசனங்கள் வடமொழி (சமஸ்கிருத) வாடையோடு இருக்கின்றன. கொஞ்சம் அவற்றில் இருக்கும் வடமொழி வார்த்தைகளை சாதாரணத் தமிழ் வார்த்தைகளாக்கி வாசித்துப் பாருங்கள். அப்போது நான் சொல்லுவது உங்களுக்குப் புரியும். இயேசு இந்தப் பகுதியில் கொடுத்திருக்கும் போதனையை அன்று புரிந்துகொள்ளாதவர்கள் இருந்திருக்க முடியாது. ஏன், தெரியுமா? அத்தனை எளிமையான, படிப்பறியாதவனுக்கும் புரிகின்ற உதாரணங்களோடு அந்தந்த நாளின் தேவைக்காக கவலைப்படுவதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று மக்களின் பாஷையில் பேசியிருக்கிறார். அங்கே அவருக்கும் செய்தியைக் கேட்டவர்களுக்கும் இடையில் சொட்டு இடைவெளிகூட இருந்திருக்க வழியில்லை. பரிசுத்த ஆவியானவர் மட்டுமே எந்த செய்தியையும் ஆண்டவரை அறியாதவர்கள் விசுவாசிக்கும்படிச் செய்ய முடிந்தாலும், அந்தச் செய்தியைக் கொடுக்க வேண்டிய பெருங்கடமையைக் கொண்டிருக்கிற நாம் இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றி எளிமையான இலகு தமிழில்

நமக்கு முன்னால் அமர்ந்து நாம் கொடுக்கும் கிறிஸ்தவ விளக்கங்களையும், சுவிசேஷத்தையும் கேட்டுக் கொண்டிருக்கிற மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் பேச வேண்டியது அவசியம். நம்முடைய கடமையை நாம் கருத்தோடு சிந்தித்து செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் நிச்சயம் தான் செய்ய வேண்டிய பணியைச் செய்வார். நம்மை மீறிச் செயல்பட அவரால் முடிந்தபோதும், சாதாரணமாக அவர் நாம் கொடுக்கும் செய்தி மூலமாகவே எப்போதும் செயல்படுகிறார். சுவிசேஷத்தை ஆவியானவர் பிரசங்கிப்பதில்லை. அந்தப் பணி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பேச்சும், செய்தியும் மக்களுக்குப் போய்ச் சேராமல் இருப்பதற்கு நாமே அநேக தடவைகள் முக்கிய காரணமாக இருந்துவிடுகிறோம் என்ற உணர்வு நமக்கு ஏற்படாதவரையில் சுவிசேஷத்தின் தாக்கம் தமிழர்கள் மத்தியில் அதிகம் இருந்துவிட வழியில்லை.

ஒரு கிராமத்தில் சுவிசேஷத்தை சொல்ல அழைப்புக் கிடைத்தது. அந்தக் கிராமத்து மக்கள் மத்தியில் இதுவரை சுவிசேஷம் பரவலாகப் போய்ச் சேரவில்லை. ஒரேயொரு சபை மட்டுமே அங்கிருந்தது. கூட்டத்தை நடத்திய சபை பாரத்தோடு அதிகமாக உழைத்ததால் அநேகர் சுவிசேஷம் கேட்க வந்திருந்தார்கள். அதில் பேசுவது எனக்கு ஒரு தவிப்பாகவே இருந்தது. அந்தத் தவிப்பு பிரசங்கம் செய்ய வேண்டுமே என்பதால் ஏற்பட்டதல்ல. இந்த சாதாரண கிராம மக்களுக்கு அவர்களுக்குப் புரியும்படி எப்படி சுவிசேஷத்தை சொல்லுவது என்பதால் ஏற்பட்ட தவிப்பு. (என்னால் முடியும் என்ற அகங்காரம் இருப்பதைவிட இத்தகைய தவிப்பு இருப்பது மேலானது.) கூட்டம் நடப்பதற்கு முதல் நாள் பூராவும் நான் கொடுக்கப் போகும் பிரசங்கத்தைப் பற்றி சிந்தித்தேன். படுக்கையில் இருந்து முழுப் பிரசங்கத்தையும் மனதில் சொல்லிப் பார்த்துக் கொண்டேன். முக்கியமாக கர்த்தர், இரட்சிப்பு, பாவம், மனந்திரும்புதல், நித்திய ஜீவன் போன்ற வார்த்தைகளை அடிக்கடி கிளிபோல் சொல்லிப் பயன்படுத்தாமல் அவற்றை கிராமத்து மக்களுக்கு எப்படிப் புரிய வைப்பது என்பதை சிந்தித்துப் பார்த்தேன். கிறிஸ்தவத் தமிழ் வாடை எதுவும் வந்துவிடாதபடி கிராமத்து தமிழில் இவற்றை எப்படி விளக்கிச் சொல்லுவது என்பதை திரும்பத் திரும்ப வாய்க்குள்ளேயே சொல்லிப் பார்த்துக் கொண்டேன். முதல் ஐந்து நிமிடத்திலேயே அவர்களுடைய கவனத்தை நாம் சொல்லுகிற விஷயத்தில் பதிய வைக்கும் விதத்தில் சொல்லப் போகிற விஷயம் சம்பந்தமாக எந்த உதாரணத்தை கிராமத்து சூழ்நிலையில் இருந்து எடுத்துப் பயன்படுத்தலாம் என்று ஆராய்ந்து பார்த்தேன். கிராமத்து மக்கள் சகஜமாகப் பயன்படுத்துகிற வார்த்தைகளை சிந்தித்துப் பார்த்தேன். இத்தனையையும் சிந்தித்து ஆராய்ந்து முழுப் பிரசங்கத்தையும் இரண்டு முறை மனதுக்குள் சொல்லிப் பார்த்து அது நிச்சயம் கிராம மக்களுக்குப் புரியும் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பிறகே அதை அடுத்த நாள் பிரசங்கம் செய்தேன். முன்னூறு பேர் அன்று அந்த செய்தியைக் கேட்க கூடியிருந்தார்கள். இதுவரை சபை வாசலை அவர்களில் எவருமே மிதித்ததில்லை. எந்தப் போலி வாக்குறுதியும் கொடுத்ததால் அவர்கள் அன்று கூடியிருக்கவில்லை. அவர்களுக்கு அன்றைக்கு சுவிசேஷ செய்தி மட்டுமே கொடுக்கப்பட்டது. அத்தனை பேரும் அசையாமல்,

நடுவில் குறுக்கிடாமல், அமைதியாக இருந்து ஆண்டவரின் சுவிசேஷத்தை ஆனந்தத்தோடு கேட்டார்கள். பலருடைய தலையும் செய்திக்கேற்றவாறு அசைந்து ஆமோதிப்பதைப் பார்த்தேன். ஆவியானவர் நிச்சயம் அன்று நம் மத்தியில் இருந்தார். சொல்லப்போகிற செய்தியை எந்தவிதத்தில் அந்த மக்களுக்குப் புரியும்படி சொல்ல வேண்டும் என்பதில் நான் கவனத்தை செலுத்தியிருக்காவிட்டால் அந்த மக்கள் அன்றைக்கு அக்கறையோடு செய்தியைக் கேட்டிருக்க மாட்டார்கள். அந்தச் செய்தி அவர்களுக்கு அன்று அந்நியமாகப் படவில்லை. அது தங்களோடு சம்பந்தப்பட்டது என்பதை அவர்களால் இனங்கண்டுகொள்ள முடிந்தது. ஒன்று தெரியுமா? கிராமத்து மக்கள் வெளிப்படையாகப் பேசுகிறவர்கள். ஏதாவது பிடிக்கவில்லை என்றால் ஒளித்து மறைத்து அவர்கள் பேசமாட்டார்கள், பிடிக்கவில்லை என்று நேரடியாகவே சொல்லி விடுவார்கள். நகரத்து மரியாதையெல்லாம் அவர்களுடைய அகராதியில் இல்லை. அன்றைக்கு செய்தி கேட்டு சந்தோஷத்தோடு அந்த மக்கள் வீடு திரும்பினார்கள். அந்த செய்தி அவர்கள் பாஷையில் கொடுக்கப்பட்டதுதான் அதற்கு முக்கியமான காரணம். கர்த்தருக்கே எல்லா மகிமையும்.

இது சம்பந்தமாக கொலோசெயர் 4:4ல் பவுல் அருமையான ஒரு காரியத்தை சொல்லியிருக்கிறார், "கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேசவேண்டிய பிரகாரமாய் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு . . . எங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்" என்கிறார். இதில் "பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி அதை வெளிப்படுத்த" என்ற வார்த்தைகளை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மூல மொழியான கிரேக்கத்தில் இருப்பதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் அது பின்வரும் வகையில் இருக்கும். "that I may make it clear, which is the way I must speak". இதை, "that I may make it clear, which is how I must speak" என்றும் மொழிபெயர்க்கலாம். இதை விளக்கமாகத் தமிழில் மொழிபெயர்த்தால் அது, "(சுவிசேஷத்தை) நான் தெளிவாக விளக்க வேண்டும், அதுவே நான் பேச வேண்டிய அவசியமான (கட்டாயமான) முறை" என்று அமையும். இந்த வசனத்தில் பவுல் எந்தக் காரியத்திற்கு அழுத்தம் கொடுத்திருக்கிறார் தெரிகிறதா? "தெளிவாக விளக்கும்" பணிக்கே அழுத்தம் கொடுத்திருக்கிறார். அது அந்த வசனத்தின் இறுதியில் வருகிற "அதுவே நான் பேச வேண்டிய முறை" என்பதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. அங்கே பவுல் I must என்ற வார்த்தை களைப் பயன்படுத்தி, தெளிவாக விளக்க வேண்டியது தனக்குக் கட்டாய மான, தவிர்க்க முடியாத கடமையாக இருப்பதை உணர்த்துகிறார். இதன் மூலம் சுவிசேஷத்தை விளக்கவேண்டியதன் அவசியத்தை மட்டுமல்லாமல் அதை விளக்கப் பயன்படுத்த வேண்டிய மொழிநடை, அதோடு தொடர் புடைய பேச்சுத் தொனி என்று பேச்சு சம்பந்தமான சகலத்துக்கும் பவுல் முக்கியத்துவம் கொடுத்திருப்பதை இந்த வசனம் விளக்குகிறது. நாம் பேசுகிற பேச்சு சம காலத்துக்குரியதாகவும், கேட்போருக்கு புரியும்படியாகவும், கேட்பதற்கு சோர்வு தராததாகவும், உற்சாகப்படுத்துவதாகவும் இல்லாவிட்டால் சுவிசேஷத்தில் எந்த இந்து, எந்த முஸ்லீம், எந்த ஆதிவாசி

*அக்கறை காட்டிக் கேட்கப் போகிறான். இதை எழுதியிருக்கும் பவுல் நிச்சயம் தான் பேசிய மொழிநடையில் அதிக அக்கறை காட்டியிருந்திருப்பார். அப்படி இருந்திருந்தால் மட்டுமே ஒரு மனிதனால் இப்படி எழுதி அந்த விஷயத்துக்காக ஜெபிக்குமாறு கேட்டிருக்க முடியும். பவுலுக்கிருந்த இந்த உணர்வும், பாரமும் உங்களுக்கு இருக்கிறதா?*

*இதுவரை நான் சொல்லிக் கொண்டு வந்ததை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அடுத்த முறை பிரசங்கம் தயாரிக்கிறபோதும், வேதபாடம் நடத்தப் போகிறபோதும், புறமதத்தை சார்ந்தவர்களுக்கு சுவிசேஷத்தை சொல்லப் போகும்போதும் உங்களுடைய பேச்சு நடையைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். நீங்கள் பயன்படுத்தப் போகும் சொற் பிரயோகங்களை சிந்தித்துப் பயன்படுத்துங்கள். கொச்சையாகவும், அசிங்கமாகவும் பேசுவதுதான் தவறு. தற்கால மக்களுடைய மொழியில் அவர்களுக்குப் புரிகின்ற வகையில் தெளிவாகப் பேசுவதே நம்முடைய கடமை. இதைச் செய்ய வேண்டுமானால் முதலில் நீங்கள் வாசிக்கின்ற வேதத்தின் தமிழைப் பரிசுத்தமான தமிழாகக் கருதிப் பயன்படுத்துவதை இன்றோடு நிறுத்திக்கொள்ளப் பாருங்கள். வடமொழி (பிராமண) வாடை கொண்ட, தற்காலத்தில் பயன்படுத்தப்படாத வார்த்தைகளையும், வார்த்தைப் பிரயோகங்களையும் கொண்ட கிறிஸ்தவத் தமிழாக இல்லாமல் மக்களுக்குப் புரிகின்ற மொழியில் இலகுவான தமிழில் பேசப் பாருங்கள். நான் இத்தனையையும் பிரசங்கம் செய்கிறவர்களுக்காக மட்டும் எழுதவில்லை. தனிப்பட்ட முறையில் வேற்று மதத்தாருக்கு சுவிசேஷத்தை சொல்லுகிறவர்களும் இதையே செய்ய வேண்டும்.*

*எத்தனை அருமையான சத்தியத்தை நாம் தயாரித்து வைத்திருந்தபோதும் அது மக்களைப் போய்ச்சேர வேண்டிய ஊடகமான நாம் பேசுகிற மொழிநடை அந்த சத்தியம் அடைய வேண்டிய இலக்கான ஆத்துமாக்களின் இருதயத்துக்குப் போய்ச்சேரத் தடையாக இருந்துவிடுவது எத்தனைப் பாவம் தெரியுமா? 'போனவாரம் நம் கடையில் சோப்பு வாங்க வந்தபோது நல்லாப் பேசிக்கொண்டிருந்த மனிதர் இந்தக் கூட்டத்தில் மட்டும் ஏன் எனக்குப் புரியாத பாஷையில் பேசுகிறார்' என்று பெட்டிக் கடைக்காரன் கேட்கின்ற மாதிரி நாம் நடந்துகொள்வது அவசியமா? நீங்கள் பேசும் மொழி உங்கள் ஊழியத்துக்கு தடையாக இருந்துவிடாதபடி பேச்சு நடையைத் திருத்திக் கொள்ளுங்கள். பாரதியும், பாரதிதாசனும், அண்ணாத்துரையும் கிறிஸ்தவர்கள் அல்ல. அவர்களுடைய செய்திகளும் ஆத்மீக விடுதலையை மக்களுக்குக் கொடுக்கவில்லை. இருந்தாலும், மக்களுடைய மொழியில் பேசி அவர்கள் இருதயத்தை அசைய வைக்கும் திறனை அவர்கள் கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது அதைத்தான் செய்தார். அவருடைய செய்தி மட்டுமல்ல, அந்தச் செய்தியை அவர் விளக்கிப் போதித்த மொழிநடை மக்களுடைய இருதயத்தை அசைத்து, 'இதுபோல் யாரும் பேசி நாம் இதுவரை கேட்டதில்லையே' என்று அவர்களை சொல்ல வைத்தது. சுவிசேஷம் அதைக் கேட்க வேண்டிய மக்கள் மொழியில் அவர்களைப் போய்ச் சேரும் பணியில் அதிக கவனத்தை செலுத்துங்கள்.*

# 1689 விசுவாச அறிக்கையைப் படிக்க வேண்டிய முறை

விசுவாச அறிக்கையின் சிறப்பையும், அதைப்படிக்க வேண்டிய அவசியத்தையும் பற்றிப் பலதடவைகள் நான் எழுதியிருக்கிறேன். இந்த ஆக்கத்தில் அதை எப்படிப் படிக்க வேண்டும் என்பதற்கான விளக்கங்களைத் தர விரும்புகிறேன். அதற்கு முன்பாக விசுவாச அறிக்கை பற்றிய ஒருசில உண்மைகளை விளக்க வேண்டியது அவசியமாகிறது.

## 1689 விசுவாச அறிக்கையின் முக்கியத்துவம்

1689 விசுவாச அறிக்கை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பத்து வருடங்களாகிறது. விசுவாச அறிக்கையொன்றை அடிப்படையாகக் கொண்டு, தாம் விசுவாசிக்கும் சத்தியங்களை வெளிப்படையாக வெட்கமோ, பயமோ, தயக்கமோ இல்லாமல் அறிவித்து, திருச்சபை நடத்த விரும்புகிறவர்கள் இதனைத் தங்களுடைய சபையின் விசுவாச அறிக்கையாக ஏற்று, அறிவித்து ஊழியத்தில் ஈடுபடுவார்கள். இப்படிச் செய்வது இன்று நேற்று என்றில்லாமல் ஆதி சபைக்காலத்தில் இருந்தே நடந்து வந்திருக்கின்றது. அப்போஸ்தலர்களின் காலத்துக்குப் பிறகு முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள்ளேயே சபையைப் போலிப்போதனைகள் கடுமையாகத் தாக்க ஆரம்பித்ததால், சபைகள் தாம் விசுவாசிப்பவற்றைத் தெளிவாக அறிக்கைகள் மூலம் விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மூன்றாம் நூற்றாண்டில் ஏரியன் என்பவன் கிறிஸ்துவின் தெய்வீக, மானுடத் தன்மைகள் பற்றி குழப்பமான போதனைகளைத் தந்து ஆத்துமாக்களைத் திசை திருப்ப ஆரம்பித்தான். சபையைக் காப்பாற்றுவதற்காக அன்று சபையில் உதவிக்காரராக இருந்த அத்தனேஸியஸ் ஏரியனுடைய போலிப்போதனையை தோலுரித்துக் காட்டியது மட்டுமல்லாமல் கிறிஸ்துவின் தெய்வீக, மானுடத் தன்மைகள் பற்றி வேதம் போதிக்கும் உண்மைகள் யாவை என்பதை ஓர் அறிக்கை மூலமாக சுருக்கமாக வெளியிட்டு சபையைக் காப்பாற்றினார். அதற்குப் பிறகு காலத்துக்குக் காலம் இத்தகைய அறிக்கைகளை சபைகள் வெளியிட்டு வந்திருக்கின்றன. இவையெல்லாம் பிசாசின் தாக்குதலில் இருந்து தப்பி, சபை இந்த உலகத்தில் வெற்றி நடைபோட்டு வர அவசியமாக இருந்தன. பிசாசின் இடைவிடாத தாக்குதல்களும், கால மாறுதல்களும் இத்தகைய விசுவாச அறிக்கைகளை அவசியமானதாக்கியிருக்கின்றன. ரோமன் கத்தோலிக்க மதத்தின் அடக்குமுறையும், சத்தியத்திற்கெதிரான விரோதப் போக்கும் உலகறிந்தவை. அம்மதத்தின் அதிகாரம் பதினாறாம் நூற்றாண்டில்

*முறியடிக்கப்பட்ட பிறகு சபை மறுபடியும் அத்தகைய ஆபத்துக்குள் போய்விடாதபடி இருப்பதற்காக விசுவாச அறிக்கைகளும், வினாவிடைப் போதனைகளும் சபைப் பாதுகாப்புக்காகவும், ஆத்துமாக்களின் வேத அறிவு வளர்ச்சிக்காகவும் சீர்திருத்தவாதிகளால் வெளியிடப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் 1689 விசுவாச அறிக்கை. இன்று ரோமன் கத்தோலிக்க மதம் மட்டுமல்லாமல் புதிது புதிதாக எழும்பியிருக்கும் பல்வேறு குழப்பப் போதனைகளையும் சபை சந்திக்க வேண்டியிருக்கிறது. இவற்றின் வசியத்துக்கு சபை ஆளாகி விடாதபடி இருக்க விசுவாச அறிக்கையின் அடிப்படையில் அமைந்த சபை அமைப்பு அவசியமாகிறது. சபை மக்களுக்கு தாம் எதை விசுவாசிக்கிறோம் என்பது தெரியாமலிருப்பதைப் போன்ற ஆபத்து வேறில்லை. அத்தோடு, சபையை வழிநடத்துகிறவர்களும் எதேச்சாதிகாரப் போக்கில் போய்விடாமல் இருக்கவும், தங்களைக் குழப்பப் போதனைகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ளவும் விசுவாச அறிக்கை உதவும். வேதத்திற்கும், தாம் ஏற்றுக்கொண்டிருக்கும் விசுவாச அறிக்கைக்கும் கட்டுப்பட்டு சத்தியத்தின் வழியில் சபை நடத்த இது உதவும்.*

*இந்த விசுவாச அறிக்கை எப்படி உருவானது? இதில் அப்படி என்ன விளக்கம் தரப்பட்டிருக்கிறது? என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். இது ஒரு தனி மனிதன் தன் வீட்டறையில் இருந்து சாதாரணமாக எழுதி வெளியிட்ட அறிக்கை அல்ல. பதினேழாம் நூற்றாண்டில் சீர்திருத்த பாப்திஸ்து போதகர்கள் கூடி தங்கள் காலத்து அரசியல், மத சூழ்நிலைகளை ஆராய்ந்து திருச்சபையின் பாதுகாப்புக்காக ஒன்றிணைந்து மாதங்கள் பலவற்றை செலவிட்டு வரைந்து தந்துள்ள அறிக்கை இது. வேத சத்தியங்கள் அனைத்தையும் ஒழுங்கு முறையோடு தொகுத்து, அவற்றை வேத ஆதாரங்களோடு சுருக்கமாகவும் அதேநேரம் அனைத்துப் போதனைகளையும் உள்ளடக்கியதாகவும் விளக்கி எழுதுவது என்பது சாதாரணமான காரியமல்ல. கல்விமான்களான, ஆவிக்குரிய போதகர்கள் ஒன்றுகூடி உழைத்துத் தொகுத்து சரிபார்த்து நமக்குத் தந்துள்ள அருமையான இறை போதனை அளிக்கும் சாதனம் 1689 விசுவாச அறிக்கை. இதைத் தயாரித்தபோது அதே காலப்பகுதியைச் சேர்ந்த இன்னும் இரண்டு விசுவாச அறிக்கைகளையும் இதை எழுதப் பயன்படுத்திக் கொண்டார்கள் பாப்திஸ்து போதகர்கள். வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கை, சவோய் விசுவாச அறிக்கை இரண்டையும் இம்முறையில் அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். இதன் மூலம் சீர்திருத்தவாதப் போதனைகளில் ஒருமைப்பாட்டை மூன்று விசுவாச அறிக்கைகளிலும் காணலாம். 1689 விசுவாச அறிக்கையின் தனிச்சிறப்பு அதன் திருச்சபைக் கோட்பாடு சம்பந்தமானது. அதுபற்றி விளக்கும் அதிகாரம் நீளமானது. திருச்சபை பற்றிய தெளிவான பாப்திஸ்து விசுவாசத்தின் அடிப்படையில் இந்த அதிகாரம் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தரின் வார்த்தையின்படி கிறிஸ்துவுக்குக் கீழ் மூப்பர்களால் ஆளப்படும் சபையாக உள்ளூர் சபையை இது இனங்காட்டுகிறது. இது இதன் பல தனிச் சிறப்புக்களில் ஒன்று.*

## விசுவாச அறிக்கையைப் படிக்க வேண்டிய முறை

*இந்த விசுவாச அறிக்கையின் போதனைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ள பின்வரும் விஷயங்கள் உங்களுக்கு உதவும் என்று நம்புகிறேன்:*

### 1. விசுவாச அறிக்கையின் அதிகாரத் தொகுப்பு பற்றிய விளக்கம் அவசியம்.

*ஆரம்பத்திலேயே நாம் படிக்கப்போவது வேதம் போதிக்கும் சத்தியங்களைத் தொகுத்துத் தரும் இறையியல் அறிக்கை என்ற அறிவும் உணர்வும் நமக்குத் தேவை. இதை நான் சொல்லுவதற்குக் காரணம் இருக்கிறது. விசுவாச அறிக்கையை நமக்குத் தந்திருப்பவர்கள் அவசியமான அடிப்படை வேத சத்தியங்களை முறையாகத் தொகுத்து அவற்றை சுருக்கமாகவும் அதேநேரம் விளக்கமாகவும் வேத ஆதாரங்களோடு தந்திருக்கிறார்கள். இந்த அறிக்கையை முறைப்படுத்தப்பட்ட இறையியல் அறிக்கை* (Systematic theological statement) *என்று கூறலாம். இந்த அறிக்கையில் காணப்படும் ஒவ்வொரு அதிகாரமும் அவசியமான காரணங்களின் அடிப்படையில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றது. அந்தக் காரணங்கள் நமக்குத் தெரிந்திருப்பது இந்த அறிக்கையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள உதவும்.*

*இந்த அறிக்கை முதலில் வேதம் என்றால் என்ன என்பதை விளக்குவதோடு ஆரம்பிக்கிறது. அது முதலில் வருவதைக் குறித்து நாம் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. வேதம் மட்டுமே நமக்கு கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்ள கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரே வெளிப்பாடு. அந்த அதிகாரத்துக்குப் பிறகே கடவுளைப் பற்றியதும் அவருடைய செயல்களைப் பற்றியதுமான போதனைகளைத் தரும் அதிகாரங்கள் வருகின்றன. அவற்றை 2ம், 3ம் அதிகாரங்களில் பார்க்கிறோம். அதற்குப் பிறகு 4ம் அதிகாரம் கடவுளின் செயலான அவருடைய படைப்பை விளக்குகிறது. 5ம் அதிகாரம் தான் படைத்த அனைத்தையும் கடவுள் எப்படிப் பராமரிக்கிறார் என்பதை விளக்குகிறது. 6ம் அதிகாரம் மனிதனின் வீழ்ச்சியைப் பற்றியும், பாவத்தைப் பற்றியும் விளக்குகிறது. இவற்றிற்குப் பிறகு வருகின்ற 7ம் அதிகாரம் முக்கியமானது. அது கடவுள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் உடன்படிக்கைப் பற்றியது. அந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே கடவுள் தான் தீர்மானித்து ஏற்படுத்தியிருக்கும் தன்னுடைய மக்களுடைய மீட்பை நிறைவேற்றுகிறவராக இருக்கிறார். அந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே மீட்கப்பட்ட மக்களின் ஆண்டவராக அவர்களை அவர் ஆளப்போகிறார். அவருடைய மக்களும் அந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே உடன்படிக்கையின் மக்களாக அவருக்குக் கீழ்ப்படிந்து வாழப்போகிறார்கள். இந்தவிதத்தில் பார்க்கிறபோது கடவுளின் உடன்படிக்கைப் பற்றிய 7ம் அதிகாரம் மிக முக்கியமானதொரு அதிகாரமாக இருப்பதோடு முறையாக விசுவாச அறிக்கையில் இந்த இடத்தில் அமைந்திருக்கிறது.*

*அடுத்தாக வருகின்ற 8ம் அதிகாரத்தில் கடவுள் ஏற்படுத்திய*

*உடன்படிக்கையின் மீட்பராகிய இயேசு கிறிஸ்து அறிமுகப்படுத்தப்படுகிறார். 7ம் அதிகாரம் விளக்குகின்ற உடன்படிக்கைப் பற்றிய போதனையின்படி திரித்துவ அங்கத்தவர்களாகிய பிதாவும், குமாரரும் நித்தியத்தில் பிதாவால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கின்ற மக்களை மீட்கும்படியாக ஓர் உடன்படிக்கையை தங்களுக்கிடையில் ஏற்படுத்தி, அந்த உடன்படிக்கையை நிறைவேற்ற சகல தகுதிகளும் கொண்ட மீட்பராக இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்துக்கு அனுப்பி வைக்கிற தீர்மானத்தை எடுத்தனர். பிதாவின் கட்டளைக்கு இணங்க குமாரரான கிறிஸ்து மீட்புப் பணியை நிறைவேற்ற மனித ரூபமெடுத்தார். 8ம் அதிகாரம் உடன்படிக்கையின் நாயகரான இயேசு கிறிஸ்துவின் மீட்பருக்குரிய தகுதிகளை விவரித்துக் கூறி, அந்த மீட்புக்காக அவரெடுக்க வேண்டியிருந்த தெய்வீக, மானுடத் தன்மைகள் இணைந்த மானிடப் பிறப்பை விளக்கி, அந்த மீட்புப் பணியில் அவர் நிறைவேற்ற வேண்டியிருந்த மூன்று பதவிகளையும் சுட்டிக் காட்டி, மீட்புக்காக அவர் நிறைவேற்ற வேண்டியிருந்த மீட்பின் கிரியைகளையும் விளக்கிக் கூறுகிறது. இந்த அதிகாரம் கிறிஸ்துவின் ஆள்தத்துவம் பற்றியும், அவருடைய கிரியைகளைப் பற்றியும் விபரிக்கும் அருமையானதொரு நீண்ட அதிகாரம்.*

*இதனை அடுத்து வருகின்ற 9ம் அதிகாரம் இந்த விசுவாச அறிக்கையின் இன்னுமொரு முக்கியமான அதிகாரம். அது முறையாக இந்த இடத்தில் வருகின்றது. மீட்பராகிய கிறிஸ்துவையும், மீட்புக்காக அவர் நிறைவேற்றிய மீட்பின் கிரியைகளையும் 8ம் அதிகாரத்தில் விளக்கிய விசுவாச அறிக்கை, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மட்டுமே அனுபவிக்கின்ற அந்த மீட்பின் பலன்களை 10ம் அதிகாரத்தில் இருந்து 18ம் அதிகாரங்கள் வரையுள்ள பகுதிகளில் விளக்குவதற்கு முன்பாக முக்கியமானதொரு இறையியல் விளக்கத்தை 9ம் அதிகாரத்தில் அளிக்கிறது. அது மனிதனுடைய சுயாதீன சித்தம் பற்றிய போதனையாகும். இந்தப் போதனையை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டால் மட்டுமே 10ம் அதிகாரத்தில் இருந்து கொடுக்கப்படுகின்ற இரட்சிப்பின் பலன்கள் பற்றிய போதனைகளைப் புரிந்துகொள்ள முடியும். அதனால்தான், விசுவாச அறிக்கையில் 9ம் அதிகாரம் மனித சித்தம் பற்றிய முக்கியமான போதனையை அளிக்கின்றது.*

*அதை அடுத்து வருகின்ற, 10ல் இருந்து 18 வரையுள்ள அதிகாரங்களில் இரட்சிப்பின் பலன்களை விசுவாச அறிக்கை விளக்குகின்றது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், அதன் பலன்களின் மேன்மையையும் விளங்கிக்கொள்ள உதவும் போதனைகளே இரட்சிப்பின் பலன்கள். அந்தப் பலன்களை இறையியல் அறிஞர்கள் படிமுறையாக விளக்கியிருக்கிறார்கள். அவற்றை 'இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு' என்று அழைப்பார்கள். இந்த ஒழுங்குக்கான வேத ஆதாரத்தை நாம் ரோமர் 8:30ல் காண்கிறோம். இந்தப் பலன்களின் படிமுறை அழைப்பு, நீதிமானாக்குதல், மகிமைப்படுத்தல் என்று வரிசைக்கிரமமாக தரப்பட்டிருக்கிறது. இந்தப்படிமுறை ஒழுங்கில் காணப்படும் அனைத்துக் கிருபைகளையும் ரோமர் 8:30 விளக்காவிட்டாலும் அவற்றிற்கான ஆதாரத்தைத் தருகின்றது. அந்த*

ஒழுங்கிலுள்ள கிருபைகளை விசுவாச அறிக்கை இரண்டு தலைப்புகளில் வரிசைப்படுத்தித் தருகின்றது.

1. **கடவுள் மனிதனுக்கு அளிக்கும் கிருபைகள்** – திட்ப உறுதியான அழைப்பு, நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல்.
2. **மனிதன் பங்கேற்கும் கிருபைகள்** – இரட்சிக்கும் விசுவாசம், மனந்திரும்புதலும், இரட்சிப்பும், நற்கிரியைகள், பரிசுத்தவான் களின் விடாமுயற்சி, இரட்சிப்பின் நிச்சயம்.

இவையே அந்த இரண்டு பிரிவுகளாகும். இறையியல் வல்லுனர்கள் இவற்றை வெவ்வேறுவிதமாக வரிசைப்படுத்தியிருப்பார்கள். உதாரணமாக அழைப்பில் ஆரம்பித்து மறுபிறப்பு, மனந்திரும்புதல், விசுவாசம், நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல் . . . என்று அவர்களுடைய பட்டியல் அமைந்திருக்கும். இருந்தபோதும் விசுவாச அறிக்கையின் வரிசைப்படுத்தலில் தவறில்லை. அதன் வித்தியாசமான வரிசைப்படுத்தலுக்கான காரணத்தைத் தெரிந்துகொண்டால் போதும்.

1689 விசுவாச அறிக்கை 'திட்ப உறுதியான அழைப்பு' என்ற தலைப்பில் மனிதனுடைய இரட்சிப்பிற்காக கடவுள் செய்கின்ற கிருபையின் ஆரம்பக் கிரியைகளையும் உள்ளடக்கி விளக்குகின்றது. இதில் 'அழைப்பு', 'மறுபிறப்பு', மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தையும் கூட உள்ளடக்கி பதினேழாம் நூற்றாண்டு இறையியலறிஞர்கள் விளக்கியிருக்கிறார்கள். இதன்காரணமாகத்தான் 'மறுபிறப்பு' என்ற போதனை தனியாக ஒரு அதிகாரத்தில் தரப்படவில்லை. ஜோன் மரே உட்பட தற்கால இறையியல் அறிஞர்கள் தெளிவான இறையியல் விளக்கமளிக்கும் பொருட்டாக 'திட்ப உறுதியான அழைப்பை', 'மறுபிறப்பில்' இருந்து பிரித்து விளக்குகிறார்கள். இரண்டும் பிரிக்கமுடியாதபடி இணைந்து காணப்பட்டபோதும் வேதம் மறுபிறப்பைப் பற்றித் தனியாகவும் விளக்கியிருப்பதைப் பல இடங்களில் காண்கிறோம்(உதாரணம்: யோவான் 3). ஆகவே, தற்கால இறையியல் அறிஞர்கள் இவற்றைப் பிரித்துக் காட்டியிருப்பதில் எந்தத் தவறுமில்லை. உண்மையில் இப்படிப் பிரித்து விளக்கியிருப்பது நமக்கு இந்தப் போதனைகள் பற்றிய அதிக விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள உதவுகின்றன.

இவற்றிற்குப் பின் வருகின்ற அதிகாரங்கள் (19-32) கடவுளின் நியாயப்பிரமாணத்தில் ஆரம்பித்து, இறுதி நியாயத்தீர்ப்பு வரையிலுள்ள போதனைகளை அளிக்கின்றன. இவற்றிற்குள் சுவிசேஷத்தைப் பற்றியும், தனி மனித சுதந்திரத்தைப் பற்றியும், ஆராதனை மற்றும் ஆராதனையின் நாள் பற்றியும், திருச்சபை சம்பந்தமான முக்கியமான போதனைகளையும், இறுதிக் காலம் பற்றிய போதனைகளையும் காண்கிறோம். இந்தவிதமான அவசியமான ஓர் ஒழுங்குமுறைப்படி விசுவாச அறிக்கை நாம் விசுவாசிக்க வேண்டிய அடிப்படை வேதபோதனைகளை முறைப்படுத்தி நமக்கு வழங்கியிருக்கின்றது.

இந்த முறையில் விசுவாச அறிக்கையைப் படிக்க வேண்டும் என்று நான் சொல்லுவதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படத் தேவையில்லை.

ஏனென்றால், வேதத்தையும் இந்த முறையில்தான் படிக்க வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு முதல் நான்கு சுவிசேஷ நூல்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். அந்த நூல்கள் ஒரு காரணத்தோடுதானே அடுத்தடுத்து வருகின்றன. அத்தோடு அவை நான்குமே ஒரே விஷயத்தை, அதாவது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி விளக்குகின்றன. அப்படி விளக்க வேண்டிய அவசியமென்ன? அதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை. இதெல்லாம் தெரியாமல் அந்த நான்கு நூல்களையும் அவற்றின் போதனைகளையும் நம்மால் விளங்கிக்கொள்ள முடியுமா என்ன? அந்த நூல்கள் ஏன் ஒரு ஒழுங்கோடு, எந்தக் காரணங்களுக்காக ஒரே விஷயத்தைச் சொல்லுகின்றன? எதற்காக நான்குவிதமாகச் சொல்லு கின்றன என்ற கேள்விகளையெல்லாம் கேட்டுப் பார்த்து விஷயங்களை அறிந்துகொள்ளுகிறபோதே அந்த சுவிசேஷ நூல்களின் போதனைகளின் பொருளை அறிந்து நாம் பயனடைய முடிகின்றது. அந்தவிதத்தில்தான் விசுவாச அறிக்கையின் ஒவ்வொரு அதிகாரத்தையும் அவை அமைந்திருக்கும் ஒழுங்கின்படி அவற்றின் பின்னணியை அறிந்து நாம் படிப்பது அவசியம்.

## 2. கிறிஸ்தவ வரலாற்று அறிவு விசுவாச அறிக்கையின் முழுப்பலன்களையும் பெற்றுக்கொள்ள உதவும்.

1689 விசுவாச அறிக்கை பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் கிறிஸ்தவ சபைகள் சந்தித்துள்ள அரசியல் மற்றும் திருச்சபைப் பிரச்சனைகளே விசுவாச அறிக்கை எழுதப்படுவதற்கு காரணமாக இருந்திருக்கின்றன. ஒவ்வொரு அதிகாரமும் வேத சத்தியங்களை விளக்கினாலும் கிறிஸ்தவ வரலாற்றின் தாக்கத்தை அவற்றில் கவனிக்காமல் இருக்க முடியாது. ஓரளவுக்கு கிறிஸ்தவ வரலாற்று அறிவு இருப்பது விசுவாச அறிக்கையின் முழுப்பலனையும் பெற்றுக்கொள்ள உதவும். விசுவாச அறிக்கை வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாக அதன் அடிப்படையில் எழுதப்பட்டதாக இருக்கிறது. உதாரணத்திற்கு இதை எழுதியவர்கள் எல்லோர் மனதிலும் ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பற்றிய நினைவுகள் இல்லாமல் இருக்கவில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகத்தான் (16ம் நூற்றாண்டு) அந்த மதம் கிறிஸ்தவர்களை இருந்த இடம் தெரியாமல் செய்து, சின்னாப் பின்னமாக்கி வைத்திருந்த நிலை மாறி திருச்சபை சீர்திருத்தம் உருவானது. அந்த மதத்தின் அடக்கு முறைக்கு மறுபடியும் இடங்கொடுத்துவிடக்கூடாது என்ற எண்ணம் விசுவாச அறிக்கையை எழுதியவர்கள் மனதில் நிச்சயம் இருந்திருக்கிறது. அத்தோடு பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் ஆங்கிலேயத் திருச்சபையில் ரோமன் கத்தோலித்த மத வாடை அடிப்பது போல் சடங்குமுறையில் ஆராதனை நடத்துவதும், திருச்சபையில் வேதத்திற்கு மதிப்புக்கொடுக்காமல் மனித சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல்களும் அதிகரிக்க ஆரம்பித்தன. இதிலிருந்து சபையைப் பாதுகாக்கவும் தெளிவான ஒரு விசுவாச அறிக்கை தேவைப்பட்டது. வேதத்தைப் பற்றி தெளிவாக விளக்கும் முதலாவது அதிகாரமும், திருச்சபை வழிபாட்டையும், ஓய்வு நாளைப் பற்றியும் விளக்கும் அதிகாரமும் இவற்றை மனதில் வைத்தே

எழுதப்பட்டன. கத்தோலிக்க மதத்தின் போலி ஆராதனை முறைக்கு மறுபடியும் திரும்பிவிடக்கூடாது என்பதை மனதில் கொண்டே ஆராதனை பற்றிய ‘வரையறுக்கப்பட்ட ஆராதனைத் தத்துவங்கள்’ 22ம் அதிகாரத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காலப்பகுதியில் இங்கிலாந்தில் ஆங்கிலத் திருச்சபையில் நிகழந்த நிகழ்ச்சிகளே இந்தப் போதனைக்கு உருக்கொடுத்தன. கத்தோலிக்க மதப் போப்பை அந்தக் காலத்தில் பெரிய எதிரியாகக் கணித்திருந்தார்கள். அதனால்தான் விசுவாச அறிக்கை போப்பை அந்திக்கிறிஸ்துவாக அடையாளங் காட்டுகிறது (26:4). திருவிருந்தை யாருக்கும் மறுக்கக்கூடாது என்றும், திராட்சை இரசக்கோப்பையை உயர்த்தி மரியாதை செய்யக்கூடாதென்றும் திருவிருந்து பற்றிய அதிகாரத்தில் விளக்கியிருப்பதற்குக் காரணம் ரோமன் கத்தோலிக்க மதம் வேதத்திற்கு முரணாக அந்தக் காரியங்களைச் செய்ததாலேயே. கிறிஸ்தவனின் சுதந்திரத்தைப் பற்றிய ஓர் அதிகாரம் இதில் இருக்கிறது. கடவுளைத் தவிர வேறு எவருக்கும், போப் போன்ற மனிதர்களுக்கும் கூட கட்டுப்படக்கூடாது என்பதை சுட்டிக்காட்டும் வகையில் கிறிஸ்தவனின் மனச்சாட்சி கர்த்தருக்கு மட்டுமே கட்டுப்பட்டது என்று விசுவாச அறிக்கை போதிப்பதற்கும் அன்றைய அரசியல், சபை நிகழ்வுகள் தான் காரணம். இதெல்லாம் விசுவாச அறிக்கையின் போதனைகளை நல்ல முறையில் விளங்கிக்கொள்ள எந்தளவுக்கு கிறிஸ்தவ வரலாற்று அறிவு அவசியம் என்பதை உணர வைக்கின்றது.

இவை மட்டுமல்லாமல் இன்னொரு பெரிய வரலாற்று ஆசீர்வாதத்தையும் நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது, பதினேழாம் நூற்றாண்டே ‘பியூரிட்டன்களின்’ காலமாக இருந்தது. அதாவது, இந்தப் பெயரால் அழைக்கப்பட்ட சீர்திருத்தப் போதகர்களும், கிறிஸ்தவர்களுமே இந்தக் காலப்பகுதியில் மார்டின் லூத்தரும், கல்வினும் ஆரம்பித்து வைத்த சபை சீர்திருத்தத்தைத் தங்களுடைய காலத்தில் தொடர்ந்தனர். இந்தக் காலப்பகுதியில் கிறிஸ்தவர்கள் அரசாலும், அன்றைய அரச அங்கீகாரம் பெற்றிருந்த சபையாலும் பெருந்துன்புறுத்தலுக்கு ஆளாகியிருந்தாலும் கிறிஸ்தவம் அநேக விதங்களில் பெருஞ்சிறப்புடையதாக இந்தக் காலத்தில் காணப்பட்டது. இந்தக் காலத்திலேயே ஜோன் ஓவன், ஜோன் பனியன், வில்லியம் பேர்கின்ஸ், தொமஸ் குட்வின், ரிச்சட் சிப்ஸ், ஜோன் பிளேவல், தொமஸ் வொட்சன், ஜொனத்தன் எட்வர்ட்ஸ் போன்ற பெருஞ் சிறப்புமிக்க கிறிஸ்தவ தலைவர்கள் வாழ்ந்திருந்தனர். இவர்களுடைய ஆசீர்வாதமுள்ள கிறிஸ்தவ இலக்கியங்கள் இன்றைக்கும் ஆங்கிலத்தில் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தக்கூடிய விதத்தில் காணப்படுகின்றன. இந்தப் பியூரிட்டன்களுடைய சிந்தனையின், அறிவின், வேத ஞானத்தின் தாக்கத்தை நாம் விசுவாச அறிக்கையில் கவனிக்காமல் இருக்க முடியாது. விசுவாச அறிக்கையின் அநேக அதிகாரங்களில் பியூரிட்டன்களின் ஞானத்தின் கைவண்ணத்தை நம்மால் பார்க்க முடியும். வரையறுக்கப்பட்ட ஆராதனைத் தத்துவங்களைத் தரும் 22ம் அதிகாரம், மனச்சாட்சியின் சுதந்திரத்தை விளக்கும் 21ம் அதிகாரம், திருச்சபையைப் பற்றிப் போதிக்கும் 27ம் அதிகாரம் இவற்றில் சிறப்பானவை. ஆரம்பத்தில் 10

முதல் 19 அதிகாரங்கள் வரை கொடுக்கப்பட்டிருக்கும் போதனைகளிலும் அவர்களுடைய கைவண்ணத்தைக் காணலாம். இந்த வகையில் நம்முடைய விசுவாச அறிக்கை 16ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகளினதும், 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிறப்புவாய்ந்த பியூரிட்டன்களுடையதுமான சிந்தனை, ஞானம் ஆகியவற்றின் அடிப்படையில் தரப்பட்டிருக்கும் அருமையான வேத போதனைகளாக இருக்கின்றன.

வரலாற்றோடு தொடர்புடைய, அதன் அடிப்படையில் விசுவாச அறிக்கை எழுதப்பட்டிருந்தாலும் அதன் அவசியத்தை இன்று குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது. ரோமன் கத்தோலிக்க மதம் 16ம் நூற்றாண்டில் இருந்தளவுக்கு பலத்தோடு இன்று இல்லாவிட்டாலும் அதன் போதனைகள் இன்றும் தொடர்கின்றன; திருச்சபையைப் பாதிக்கின்றன. இந்திய நாட்டில் ரோமன் கத்தோலிக்கப் போதனைகள் என்று தெரியாமல் அநேகக் கிறிஸ்தவர்கள் அந்த மதப்போதனைகளைப் பின்பற்றி வருகின்றனர். கிறிஸ்தவ தலைவர்கள்கூட அவற்றைப் பின்பற்றி வருகின்றனர். அந்தளவுக்கு அதற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையில் இருக்கும் வேறுபாடு பலருக்குத் தெரியவில்லை. பாப்திஸ்து சபை ஊழியர்கள் சிலுவைக் குறியிடுவதை நான் கண்ணால் கண்டிருக்கிறேன். கிறிஸ்தவ வரலாற்று அறிவு நமக்கு மிகவும் அவசியம். விசுவாச அறிக்கையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுவதற்கு மட்டுமல்லாமல் இன்றைக்கு நாம் சந்தித்துவரும் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட அநேக போலித்தனங்களை இனங்கண்டு எதிர்த்து நிற்கவும் விசுவாச அறிக்கையின் வரலாற்றுப் பின்னணி நமக்குப் பேருதவி செய்யும்.

### 3. வரலாற்று இறையியல் (Historical Theology) அறிவும் விசுவாச அறிக்கையின் போதனைகளை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள உதவும்.

வரலாற்று இறையியல் என்பது இறையியல் போதனைகள் வரலாற்றில் எந்தவிதமான எதிர்ப்புகளுக்கு மத்தியில் வளர்ந்து வந்துள்ளன என்பதை விளக்கும் இறையியல் போதனையாக இருக்கிறது. உதாரணத்திற்கு 8ம் அதிகாரத்தில் காணப்படும் கிறிஸ்துவின் தெய்வீக மற்றும் மானுடம் இரண்டும் இணைந்த பிறப்பைப் பற்றிப் பார்ப்போம். அந்த அதிகாரத்தில் இது தெளிவாக விளக்கப்பட்டிருப்பதோடு அதன் பல பத்திகளில் இதுபற்றிய விளக்கத்தைப் பார்க்கிறோம். திருச்சபை உருவான முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள்ளாகவே இந்தப் போதனைக்கெதிரான பலவிதமான போலிப்போதனைகள் திருச்சபையைத் தாக்கியிருந்தன. அப்பொலினேரியனிசம், நெஸ்டோரியனிசம், ஏரியனிசம் போன்ற போலிப்போதனைகளை திருச்சபை சந்தித்து எதிர்க்க வேண்டியிருந்தது. இந்த வகையில் ஆதி சபையைத் தாக்கியிருந்த போலிப்போதனைகளை அறிந்திருந்து, சபை அவற்றை எவ்வாறு எதிர்கொண்டு சத்தியத்தை நிலைநாட்டியது என்பதை அறிந்துகொள்ளுகிறபோதும் அந்த உண்மைகளின் அடிப்படையில் விசுவாச அறிக்கையை ஆராய்ந்து படிக்கிறபோதும் அதன் போதனைகளின் வலிமையையும் நடைமுறைப் பயன்பாட்டையும் நாம் உணர முடியும்.

ஆதிசபையைத் தாக்கியிருந்த போலிப்போதனைகள் பல ரூபங்களிலும் இன்றும் திருச்சபையைத் தாக்கி வருவதை யாரால் மறுக்க முடியும். தாராளவாத கொள்கைகளைப் பின்பற்றும் பாரம்பரிய சபைகள் இன்றும் இயேசு கிறிஸ்துவின் தெய்வீக, மானுட தன்மைகள் பற்றிய வேத போதனைகளை நிராகரித்துப் பேசியே வருகின்றன. இறையியல் அறிஞரான வில்லியம் பார்க்கிளே இயேசு கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பை சந்தேகக் கண்ணோடு பார்த்து அவருடைய தெய்வீகத்தை மறுத்தார். யேகோவாவின் சாட்சிகள் (Jehovah's Witnesses) இந்தப் போதனையை எதிர்த்து கிறிஸ்துவைக் கடவுளாகப் பார்க்க மறுக்கின்றனர். கிறிஸ்துவுக்கெதிரான அனைத்துப் போலிப்போதனைகளுமே அவருடைய தெய்வீகம் மற்றும் மானுடத் தன்மைக்கெதிரான போதனைகளையே கொண்டிருக்கின்றன. வரலாற்று இறையியல் பாடம் நமக்கு இந்த உண்மைகளை உணர்த்துவது மட்டுமல்லாமல் விசுவாச அறிக்கையின் போதனைகளின் அவசியத்தை நமக்கு உணரவைத்து அந்தப் போதனைகளில் அதிக தெளிவையும் அளிக்கின்றன.

இதேபோலத்தான் 5ம் நூற்றாண்டில் பெலேஜியஸ் என்பவன் மனிதன் பாவத்தால் பாதிக்கப்படவில்லை என்ற முடிவுக்கு வந்து அதைப் போதிக்க ஆரம்பித்தபோது ஆகஸ்தீன் என்ற பெரும் அறிஞர் பெலேஜியஸின் போதனைகளின் விஷத்தை சுட்டிக்காட்டி சத்தியத்தை நிலைநாட்டி சபையைக் காக்க வேண்டியிருந்தது. 16ம் நூற்றாண்டில் சீர்திருத்தப் போதனைகள் ஆரம்பித்து வளர்ந்து திருச்சபைகள் அதன் அடிப்படையில் அமைந்து வருகிறபோது அவற்றிற்கெதிரான ஆர்மீனியனிசப் போதனைகள் தலைதூக்க ஆரம்பித்தன. பெலேஜியனிசப் போதனையில் மாற்றத்தை ஏற்படுத்தி உருவானதே ஆர்மீனியனிசம் (இதை செமி-பெலேஜியனிசம் என்பார்கள்). ஆர்மீனியனிசம் வேதம் போதிக்கும் கடவுளின் முன்னறிவு, தெரிந்துகொள்ளுதல் ஆகிய போதனைகளுக்கு வேதத்திற்கு முற்றிலும் மாறான விளக்கத்தை அளிக்கிறது. மனிதனைப் பாவம் பாதித்திருந்தாலும், அவன் தனக்குத் தானே ஆத்மீக விருத்தியை உண்டாக்கிக் கொள்ளும் அளவுக்கு பாவம் அவனைப் பாதிக்கவில்லை என்று ஆர்மீனியனிசம் போதிக்கிறது. இந்தப் போதனை முற்றிலும் தவறு. மனிதன் எந்தவித ஆத்மீக விருத்தியையும் சுயமாக ஏற்படுத்திக் கொள்ள முடியாதபடி பாவம் அவனைப் பாதித்திருக்கிறது என்பதே வேத போதனை. கடவுள் அவன் இருதயத்தை அடியோடு மாற்றி தன் பக்கம் திருப்புகிறவரை அவனால் அவரை விசுவாசிக்க முடியாது என்கிறது வேதம். அதையே சீர்திருத்தவாதமும், விசுவாச அறிக்கையும் போதிக்கின்றன. இந்த அடிப்படையில் அமைந்த போதனைகளை விசுவாச அறிக்கையின் பல அதிகாரங்களில் பார்க்கிறோம். முக்கியமாக மனிதனின் வீழ்ச்சியையும் பாவத்தையும் பற்றிய 6ம் அதிகாரமும், மனித சித்தம் பற்றிய 9ம் அதிகாரமும் இந்த விஷயத்தில் நமக்கு நல்ல தெளிவை அளிக்கின்றன. மனிதனால் தனக்குத் தானே ஆத்மீக விடுதலை தரமுடியாதபடியால்தான் மீட்பராகிய இயேசு நமக்காக அனுப்பப்பட்டார் என்பதை 7ம், 8ம் அதிகாரங்கள் நமக்கு விளக்குகின்றன. மீட்பராகிய இயேசு

தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக மட்டும் மரித்தார் என்பதையும் 8ம் அதிகாரம் விளக்குகிறது. இந்தவிதமாக வரலாற்று இறையியல் மூலம் நமக்கு பெலேஜியனிச, ரோமன் கத்தோலிக்க, ஆர்மீனியனிசப் போதனைகள் எந்தெந்த காரணங்களுக்காக, எந்த வகையில் வேத போதனைகளை எதிர்த்திருந்தன என்பதை அறிந்து அவற்றோடு தொடர்புபடுத்தி விசுவாச அறிக்கையைப் படிக்கின்றபோது நமக்கு விசுவாச அறிக்கையின் போதனைகளின் நடைமுறைப் பயன்பாட்டின் அருமை தெரிய வரும். இன்றைக்கும் பெலேஜியனிச, ஆர்மீனியனிசப் போதனைகள் நம்மைச் சுற்றிலும் தலைவிரித்தாடிக் கொண்டிருப்பதை யாரால் மறுக்க முடியும்?

1689 விசுவாச அறிக்கையைத் தமிழில் போதிக்கிறவர்களும், அதைப் படிக்கிறவர்களும் இதுவரை நான் விளக்கிய அம்சங்களை மனதில் வைத்து ஆராய்ந்து படிப்பீர்களானால் இந்த அருமையான அறிக்கையின் மூலம் உங்கள் விசுவாசத்தில் உறுதியை அடைய முடியும். வெறுமனே கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லி நம் விசுவாசம் எத்தனைப் பெரியது என்று தெரியாமல் வாழ்வதால் பலனில்லை. அது எத்தனைப் பெரியது, மகத்தானது என்பதை நாம் அறிந்து கடவுளை மகிமைப்படுத்த விசுவாச அறிக்கை உதவுகிறது. இந்த இடத்தில் இன்னுமொரு உண்மையையும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். விசுவாச அறிக்கையை எழுதிய மெய்க் கிறிஸ்தவர்கள் அனைவரும் சத்தியத்தில் ஒன்றுபட்டு கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அதை எழுதித் தந்திருக்கிறார்கள். மெய்க் கிறிஸ்தவர்கள், அடிப்படை சத்தியங்களை நிராகரித்துவிட்டு கிறிஸ்துவில் ஒன்றுகூட வழியில்லை. வேத சத்தியங்கள் பற்றிய குளறுபடியான நம்பிக்கைகளை வைத்துக்கொண்டு கிறிஸ்துவை நாம் ஆராதிக்க முடியாது. நம்முடைய அறியாமையால் சத்தியத்தில் நமக்கு பேரறிவு இல்லாமல் இருந்துவிடலாம்; வசதிக்குறைவால் சத்தியத்தில் நல்லறிவு குறைவாக இருந்துவிடலாம். அதெல்லாம் சத்தியத்தில் இருந்து நம்மை விலகியோடிவிடச் செய்துவிடாது. ஆனால், சத்தியத்துக்கு முரணான, எதிரான நம்பிக்கைகளை வைத்துக்கொண்டு நம்மைக் கிறிஸ்தவர்களாக இனங்காட்டிக்கொள்ளுவது ஆபத்து. போலிப் போதனைகளும், சத்தியமும் சேர்ந்து வாழமுடியாது. சாப்பாட்டில் விஷம் இருந்தால் அதைத் தூக்கியெறிந்துவிடுவோம். விஷம் சேர்ந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு உயிர்வாழத் துடிக்கின்றவர்களை உலகம் கண்டதில்லை. அதேபோல, சத்தியத்தோடு அசத்தியத்தைக் கலந்து ஒரேகூட்டமாக கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் வாழ நாம் முயற்சிக்கக்கூடாது. சத்தியத்தை மட்டும் பின்பற்றி கிறிஸ்துவைக் கிறிஸ்தவர்கள் மகிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தரப்பட்டிருக்கும் விசுவாச அறிக்கையைப் படித்து அதில் தெளிவு பெற முயற்சி செய்யுங்கள்.

1689 விசுவாச அறிக்கை தேவையானவர்கள் பத்திரிகையிலுள்ள தமிழக முகவரிகளில் தொடர்புகொண்டு இலவச பிரதியை பெற்றுக்கொள்ளலாம்.

# பாவமும் மனித சித்தமும்

கடந்த இதழில் மனித சித்தத்தின் நிலையைப் பற்றி ஆராய ஆரம்பித்து, ஏதேன் தோட்டத்தில் நமது முதல் பெற்றோர் பாவமற்ற நிலையில் இருந்தபோது, மனித சித்தம் எந்த நிலையில் அவர்களில் காணப்பட்டது என்பதைப் பார்த்தோம். அங்கே பாவத்தால் பாதிக்கப்படாத நிலையில், பூரணமாய் இருந்த நிலையில் மனித சித்தம் முழுச் சுதந்திரத்தோடு கடவுளின் ஆணைகளை விரும்பிச் செய்துகொண்டிருந்தது என்பதை அறிந்துகொண்டோம். ஆதாமும், ஏவாளும் அங்கே நன்மையை மட்டுமே செய்து வாழ்ந்து வந்தார்கள். கடவுளோடு இடையராத ஐக்கியத்தை அனுபவித்து வந்தார்கள். அத்தகைய அருமையான வாழ்க்கை எப்படி மாறியது, அவர்கள் தங்களுடைய பூரணமான நிலையில் இருந்து விழுந்தபோது மனித சித்தத்தின் நிலைக்கு என்ன நடந்தது என்பதற்கெல்லாம் நாம் விடை காண வேண்டும். அதைத்தான் இந்த ஆக்கத்தில் நாம் ஆராயப் போகிறோம்.

## மனிதன் பாவத்தில் வீழ்ந்தான்

படைக்கப்பட்ட நிலையில் ஆதாம் பூரணமாக இருந்தபோதும் அந்த நிலையில் இருந்து விழுந்துவிடக்கூடியவனாக இருந்தான். அந்த நிலையிலேயே அவன் படைக்கப்பட்டிருந்தான். அவன் கடவுளின் வார்த்தையை மீறி நடந்தால் தன்னுடைய பூரண நிலையை இழந்துவிடக்கூடிய சாத்தியம் இருந்தது. அவன் தன்னுடைய பூரண நிலையில் தொடர்ந்து வாழ்ந்திருந்திருக்க முடியும். அதற்கு எந்தத் தடையும் இருக்கவில்லை. ஆனால், கடவுளுடைய கட்டளையை அவன் மீறாமல் இருக்க வேண்டிய கடமைப் பொறுப்பு அவனுக்கிருந்தது. ஆனால், ஆதாமும், ஏவாளும் சாத்தானின் பேச்சைக் கேட்டு கடவுளின் கட்டளையை மீறினார்கள். எது நடந்திருக்கக்கூடாதோ அது அன்று ஏதேன் தோட்டத்தில் நடந்தது. அருமையானதொரு வாழ்க்கையைத் தொடர முடியாதபடி நமது முதல் பெற்றோர் பாவம் செய்தார்கள்.

இது பற்றி விளக்குகின்ற 1689 விசுவாச அறிக்கை 9ம் அதிகாரம் 3ம் பத்தி ‘மனிதன் பாவத்தில் வீழ்ந்ததால்’ என்று ஆரம்பிக்கின்றது. இங்கே பாவம் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. மனிதனுடைய வீழ்ச்சியைப் பற்றி விசுவாச அறிக்கை 6ம் அதிகாரத்தில் விபரமாக விளக்குகிறது. ‘மனிதனுடைய வீழ்ச்சியும் பாவமும் அதற்குரிய தண்டனையும்’ என்ற அந்த அதிகாரத்தின் முதல் பத்தி எந்த முறையில் மனிதன் பாவத்தில் வீழ்ந்தான் என்பதை விளக்குகிறது. ஆதாமும், ஏவாளும் யாருடைய

தூண்டுதல்களுமின்றி, தன்னிச்சையாக கடவுளுடைய கட்டளைகளை மீறி நடந்தார்கள் என்று அதில் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 'எல்லோருக்கும் பாவம் சம்பவித்து எல்லோரும் பாவத்தில் மரித்து, நம்முடைய ஆவி, சரீரம் ஆகியவற்றின் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையாகக் கறைபடிந்து காணப்படுகிறோம்' என்று 6ம் அதிகாரம் 2ம் பத்தியில் வாசிக்கிறோம். ஆதாமும், ஏவாளும் பாவத்தில் விழுந்த நிகழ்ச்சியையும், கடவுள் அவர்களுக்குக் கொடுத்த தண்டனையையும் ஆதியாகமம் 3ம் அதிகாரம் நமக்கு விளக்குகின்றது.

1689 விசுவாச அறிக்கை ஆதாம் பாவத்தில் விழுந்ததைப் பற்றியும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் பின்வருமாறு விளக்குகிறது:

> **9:3 – மனிதன் பாவத்தில் வீழ்ந்ததால் இரட்சிப்போடு கூடிய எந்தவித ஆவிக்குரிய நன்மைகளையும் செய்யக்கூடிய தனது சித்தத்தின் வல்லமையைப் பூரணமாக இழந்தான். இயல்பாகவே மனிதன் ஆவிக்குரிய நன்மைகளை முற்றிலும் எதிர்ப்பவனாகவும் பாவத்தில் மரித்தவனாகவும் உள்ளான்.**

ஆதாமும், ஏவாளும் கடவுளுடைய கட்டளையை மீறிப் பாவம் செய்தபோது அவர்கள் அதைச் சுயமாக செய்தார்கள். அவர்களுடைய சித்தம் ஏதேன் தோட்டத்தில் இருந்தபோது நன்மையைப் பூரணமாக செய்யக்கூடிய நிலையில் மட்டும் இருக்கவில்லை, பாவத்தில் விழுந்துவிடக்கூடிய நிலையிலும் இருந்தது என்பதை நாம் ஏற்கனவே கவனித்திருக்கிறோம். அவர்களுடைய சித்தம் பூரண சுயாதீனத்தோடு இயங்கக்கூடியதாக இருந்திருக்கிறது. ஆகவே, யாராலும் வற்புறுத்தப்படாமலும், தங்களுக்குள்ளிருந்த எதனாலும் உந்தப்படாமலும் அவர்கள் பிசாசின் பேச்சைக் கேட்டு அவனுடைய பொய்யான பேச்சில் இச்சை கொண்டு கடவுளுக்கெதிராக அவர் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டிருந்த செயலைத் துணிந்து செய்தார்கள். கடவுள் புசிக்கக்கூடாது என்று சொன்ன மரத்தின் கனியை (ஆதி 3:3) யாரும் அவர்களுக்கு ஊட்டிவிடவில்லை. சாத்தான் அவர்களைக் கட்டிவைத்து அவர்களுடைய வாயில் அதைத் திணிக்கவில்லை. ஆதாமும், ஏவாளும் அதில் ஆசைகொண்டு சுய சித்தத்தோடு அந்தக் கனியைப் பறித்து விரும்பிச் சாப்பிட்டார்கள். இதிலிருந்து ஆதாமும், ஏவாளும் தங்களுடைய பாவச் செயலுக்கு வேறு எவரையும் குறைகூறவோ அல்லது வேறு எவர் மேலும் அந்தப் பழியைச் சாற்றவோ முடியாது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

பாவம் நம்மால் விளங்கிக்கொள்ள முடியாததொன்று. அது ஏன் ஏற்பட வேண்டும்? அருமையான நிலையில் இருந்த மனித வாழ்க்கையை அது கெடுத்துவிட்டதே? என்று அங்கலாய்த்தாலும் அதை நம்மால் விளங்க வைக்க முடியாது. அது ஏற்பட்டிருக்கக் கூடாதுதான். அதனால் அழிவு மட்டுமே மிஞ்சியது. முழுச் சுதந்திரமும், சுயாதீன

*சித்தமும் கொண்டிருந்த முதல் பெற்றோர் எப்படி இதில் விழுந்தார்கள் என்பதற்கு வேதம் அவர்கள் தீமையை விரும்பி, இச்சித்து அதில் சுயமாக விழுந்தார்கள் என்ற பதிலை மட்டுந்தான் நமக்குத் தருகிறது. இதுபற்றிக் குறிப்பிடும், ஸ்கொட்லாந்து இறையியல் வல்லுனர் ஜோன் மரே* (John Murray), *'முழுப் பூரணப் பரிசுத்தத்தைக் கொண்டும், நேர்மையானவனாகவும் இருந்த ஒருவர் எப்படிப் பாவத்தில் விழலாம்? அதற்கு நம்மால் பதில்கூற முடியாது. அது விடைகாண முடியாத உளவியல் ஒழுக்கப்பிரச்சனையாக இருக்கின்றது. பாவத்தை நியாயப்படுத்த எந்த ஒரு காரணமும் கிடையாது. பாவம் புரிந்துகொள்ள முடியாதது' என்று விளக்கியிருக்கிறார். நம்முடைய விசுவாச அறிக்கை பாவத்திற்கான முழுப்பழியையும் ஆதாமின் மேலேயே சுமத்துகிறது. 'ஆதாமோ, எந்தவிதப் புறத்தூண்டலுமின்றி தன்னிச்சையாக விலக்கி வைக்கப்பட்ட கனியைப் புசித்ததன் மூலம், படைப்பின் சட்டத்தையும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையையும் மீறி நடந்தான்' என்கிறது (6:1). ஆதாம் சுயமாக அடியோடு கடவுளின் கட்டளையை மீறிப் பாவத்தில் வீழ்ந்தான்.*

## ஆவிக்குரிய நன்மைகளைச் செய்யக்கூடிய வல்லமையை இழந்தான்

*பாவம் மனிதனை எந்தளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியாது. அது மனிதனை முழுமையாகப் பாதித்திருக்கின்றது என்று வேதம் பல இடங்களில் விளக்குகிறது. மனிதனுடைய அனைத்துப் பாகங்களையும் அது பாதித்திருக்கின்றது என்பதை விசுவாச அறிக்கையின் 6ம் அதிகாரம் விளக்குகிறது. மனிதனுடைய அனைத்துப் பாகங்கள் என்கிறபோது அவனுடைய சரீரம், ஆவி, இருதயம், சித்தம் எல்லாவற்றையுமே பாதித்திருக்கின்றது என்று வேதம் விளக்குகிறது. ஆதியில் சுயாதீனமாக ஆவிக்குரிய நன்மைகளை விரும்பித் தடையேதுமில்லாமல் செய்துவரக்கூடிய நிலையில் இருந்த மனித சித்தம் பாவத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டது. இன்று வேதம் போதிக்கின்ற இந்த உண்மையைப் புரிந்துகொள்ள மறுக்கின்ற அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இதைப் புரிந்துகொள்ள மறுப்பதால் நமக்கு எந்த நன்மையும் இல்லை. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்து அதற்கு முரணான எண்ணங்களைக் கொண்டிருப்பதால் நாம் இறையியல் கோளாறுள்ள நம்பிக்கைகளை மட்டுமே கொண்டிருக்க முடியும். இந்த வகையில் வேதம் போதிக்கும் இந்த உண்மையை மறுத்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இருந்திருக்கிறார்கள்.*

## பெலேஜியஸ் (Pelagius)

*5ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரிட்டனைச் சேர்ந்த துறவியான பெலேஜியஸ் என்ற மனிதர், மூல பாவத்தைப் பற்றிய தவறான கருத்துக்களை அறிமுகப்படுத்தினார். இவரைப் பற்றி இவ்விதழின் முந்தைய ஆக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த இடத்தில் அவருடைய*

கருத்துக்களை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. பெலேஜியஸின் இறையியல் சிந்தனைகள் இறுதியில் மனிதன் பாவியல்ல என்ற முடிவுக்கு அவரை வரும்படிச் செய்தன. இது எப்படி ஆரம்பித்தது தெரியுமா? பாவம் எந்தளவுக்கு மனிதனைப் பாதித்தது என்ற கேள்விக்கு அவர் விடை காண முயன்று, பாவம் முழுமையாக மனிதனைப் பாதித்திருக்கின்றது என்ற முடிவுக்கு வந்தால் அது மனிதன் செயலிழந்த, ஒன்றுக்கும் உதவாதவன் என்ற முடிவுக்கு வரும்படிச் செய்துவிடுமே என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பித்து, இதற்கு ஒரே முடிவு மனிதனைப் பாவம் பாதிக்கவில்லை என்பதுதான் என்று பெலேஜியஸ் விளக்கும் நிலை ஏற்பட்டது. மனிதனால் கடைப்பிடிக்க முடியாத கட்டளையொன்றை கடவுள் அவனுக்குக் கொடுத்திருக்க முடியாது என்று நம்பினார் இந்தத் துறவி. இந்த நம்பிக்கையே இவரைப் பாவத்தைப் பற்றிய தப்பான முடிவுகளுக்கு இழுத்துச் சென்றது. பெலேஜியஸைப் பொறுத்தவரையில், மனிதன் பின்பற்றும்படியான கட்டளைகளைக் கடவுள் கொடுத்திருப்பாரானால் நிச்சயம் கிருபையின் துணையில்லாமல் அவற்றைப் பின்பற்றக்கூடிய வல்லமை அவனுக்கு இருந்திருக்கிறது என்று நம்பினார். ஒன்றைச் 'செய்' என்று கடவுள் கட்டளையிட்டிருந்தால் அதைச் செய்யக்கூடிய 'வல்லமை' அவனுக்கு இயற்கையாகவே இருக்கிறது என்றார் பெலேஜியஸ். தன்னை நம்பும்படிக் கடவுள் மனிதனுக்கு கட்டளையிட்டிருந்தால் நிச்சயம் கடவுளை நம்பக்கூடிய வல்லமை மனிதனுக்கு இருக்கிறது என்று அவர் வாதிட்டார். ஒன்றைச் செய்யும்படிக் கட்டளையிட்டுவிட்டு அதைச் செய்ய இயலாத நிலையில் மனிதன் இருப்பானானால் அவன் அதைச் செய்யும்படிக் கடவுள் எதிர்பார்ப்பது எந்தவிதத்தில் நியாயம் என்று பெலேஜியஸ் கேட்டார்.

மனித சித்தம் தொடர்பான இந்த விஷயத்தில் அன்று பெலேஜியஸின் வாதங்களை மறுத்துக் கருத்துத் தெரிவித்தவர் ஆகஸ்தீன் என்ற திருச்சபைத் தலைவர். மூன்றாம் நூற்றாண்டில் ஏரியனுக்கும் (Arian), அத்தனேசியஸுக்கும் (Athanasius) இடையில் கிறிஸ்துவின் தெய்வீக, மானுடப் பிறப்பு பற்றி நடந்த வாதங்களுக்குப் பிறகு சபை சரித்திரத்தில் மிகமுக்கியமான இறையியல் போராட்டமாக இதுவே இருந்தது. பெலேஜியஸ் ஆரம்பித்து வைத்த இந்த இறையியல் போராட்டம் சபை வரலாற்றில் பாவத்தைப் பற்றியும், மனித சித்தத்தைப் பற்றியும் வேதத்துக்கு முரணானதொரு இறையியல் கோட்பாட்டை உருவாக்கி இன்றும் உலகில் தொடரும்படிச் செய்திருக்கிறது. பெலேஜியஸின் வாதங்களை மேலும் சிந்தித்துப் பார்ப்போம். பெலேஜியஸைப் பொறுத்தவரையில் இயற்கையின் கடமைகளை மனிதன் நிறைவேற்றுவதற்கு கிருபையின் அவசியம் அவனுக்குத் தேவையில்லை. சுயாதீனமான தன்னுடைய சித்தத்தை மனிதன் சரியாகப் பயன்படுத்தினால் எல்லா நன்மைகளையும் அவன் அடைய முடியும் என்றார் பெலேஜியஸ். தன்னுடைய சுய முயற்சியால் ஒழுக்கத்தில் மட்டுமல்லாமல் ஆவிக்குரிய சகல நன்மைகளையும் மனிதன் அடைய முடியும் என்பது பெலேஜியஸின் நம்பிக்கையாக இருந்தது. அதுமட்டுமல்ல, இயற்கை, பூரணமாக

நன்மையானதாக படைக்கப்பட்டிருப்பதால் எந்தவிதக் கேடும் அதைக் கெடுத்துவிட முடியாது, மாசுபடுத்திவிட முடியாது என்றார் பெலேஜியஸ். பாவத்திற்கு பெலேஜியஸ் கொடுத்த விளக்கத்தைக் கொஞ்சம் கவனியுங்கள். நீதியானவற்றிற்கு எதிரான காரியங்களைச் செய்வதே பாவம் என்று விளக்கிய பெலேஜியஸ் அதைச் செய்யாமலிருக்கும் சுதந்திரம் மனிதனுக்கு இருக்கிறது என்றார். அத்தோடு, மனிதன் தன்னுடைய சுயாதீனமான சித்தத்தை முறையாகப் பயன்படுத்தினால் நீதியற்ற எந்தத் காரியங்களையும் செய்யாமல் தவிர்த்துவிட முடியும் என்றார். பாவமென்பது நாம் செய்கிற தவறேயல்லாமல் இயற்கையாகக் காணப்படுகிற ஒன்றல்ல என்பது பெலேஜியஸின் முடிவு. பெலேஜியஸின் வாதங்களைக் கவனித்தீர்களா? இந்த மனிதர் இதோடு நிறுத்திக் கொள்ளவில்லை.

பாவத்தைப் பற்றி விளக்கும் பெலேஜியஸ், அது மனிதனில் காணப்படும் தன்மையல்ல அவனுடைய வெறும் செயல் மட்டுமே என்றார். இயற்கையில் மனிதன் பூரணமாகப் படைக்கப்பட்டிருப்பதாலும், அவனால் கேடு செய்யாமல் இருந்துவிடலாம் என்பதாலும், கடவுளின் கட்டளையை மீறியபோது அவன் செய்த செயல் மட்டுமே பாவம் என்றும் அது அவனுடைய மானுடத்தை எந்தவிதத்திலும் பாதித்துவிடவில்லை என்றும் விளக்கினார் பெலேஜியஸ். மனிதனுடைய பாவச்செயல் அவனைப் பாவியாக்கிவிட முடியாது என்று இந்த மனிதர் வாதிட்டார். மேலும், புசிக்கக்கூடாத கனியைப் புசிப்பதற்காக ஆதாமின் இருதயத்தில் ஏற்பட்ட தீவிர இச்சை பாவத்தைச் செய்யத் தூண்டுகிற உணர்வு மட்டுமே, அது பாவமில்லை என்றும் கூறினார். பெலேஜியஸின் கருத்துகளில் பல முரண்பாடுகள் இருந்தன. இந்தக் கருத்துக்களெல்லாம் பெலேஜியஸை எங்கு கொண்டுபோய் விட்டன தெரியுமா? இயற்கையாகவே மனிதன் பாவத் தன்மையைக் கொண்டிராமல் இருப்பதால் அவனால் இந்த உலகத்தில் பூரணமாக இருந்துவிட முடியும் என்ற முடிவுக்கு பெலேஜியஸ் வரவேண்டியிருந்தது. பெலேஜியஸின் கருத்துக்கள் ஆதாமின் வீழ்ச்சியின் காரணமாக மனிதன் பாவக்கறைபடிந்த இருதயத்தைக் கொண்டிருக்கிறான் என்ற போதனையையும், மூல பாவத்தையும் அடியோடு நிராகரித்தன.

ஆதாம் படைப்பில் சுயாதீன சித்தத்தோடு படைக்கப்பட்டிருந்தான் என்பதைப் பெலேஜியஸ் மறுக்கவில்லை. அத்தோடு ஆதாம் ஆவிக்குரிய சில தன்மைகளோடும் இருந்தான் என்கிறார் அவர். சுயாதீனமாகவே பாவத்தை செய்த ஆதாம் அதனால் தன்னுடைய இருதயத்தில் பாதிக்கப்படவில்லை என்கிறார். ஆதாம் அழிவில்லாத வாழ்க்கைக்காகப் படைக்கப்படவில்லை என்றும் அதனால் அவனால் இறக்க முடிந்தது என்றும் பெலேஜியஸ் கூறினார். இதனால் மரணம் பாவத்தால் ஏற்படவில்லை என்பது அவருடைய நம்பிக்கை. இதற்கெல்லாம் மேலாக, ஆதாமின் வழித்தோன்றல்கள் பற்றிய பெலேஜியஸின் கருத்துக்களைப் பார்ப்போம். ஆதாமின் வழித்தோன்றல்கள் ஆதாமில்

இருந்து ஆவிக்குரிய மரணத்தையோ அல்லது சரீர மரணத்தையோ பெற்றுக்கொள்ளவில்லை என்கிறார் அவர். அவர்கள் இறப்பதற்குக் காரணம் அவர்களும் அழியும்படி படைக்கப்பட்டிருப்பதால்தான் என்பது பெலேஜியஸின் முடிவு. ஆவிக்குரிய மரணம் ஆதாமில் இருந்து எல்லா மனிதர்களுக்கும் வரவில்லை என்று மூல பாவத்தின் தன்மைகளை பெலேஜியஸ் நிராகரித்தார். பெலேஜியஸின் இந்தப் போதனைகளை நான் விளக்குவதற்குக் காரணம் ஓரளவுக்கு நீங்கள் இதுபற்றி தெரிந்துவைத்திருக்க வேண்டுமென்பதற்காகத்தான். பெலேஜியஸின் போதனைகள் வேத போதனைகளை எந்தளவுக்கு மீறிப் போயிருக்கின்றன என்பதை நீங்கள் உணர்வது அவசியம்.

மூல பாவத்தை நிராகரித்த பெலேஜியஸின் போதனைகள் குறிப்பாக மனித சித்தம் பற்றிச் சொல்வதென்ன என்பதை நாம் பார்க்கத்தானே வேண்டும். ஏனென்றால், அதுதானே இந்த ஆக்கத்தின் கருப்பொருள். பெலேஜியஸ் மூல பாவத்தை நிராகரித்ததால் மனித சித்தம் பாவத்தால் பாதிக்கப்படவில்லை என்றும் அது சுயாதீனமாக இயங்கக்கூடிய முழு வல்லமையோடு எப்போதும் இருக்கிறதென்றும் விளக்கினார். ஆதாமின் பாவமும், குற்றவுணர்வும் மனிதகுலத்துக்கு மாற்றப்படவில்லை என்று கூறும் பெலேஜியஸ், மனிதன் ஆத்மீகக் காரியங்களை செய்யும் சுயாதீன சித்தத்தோடேயே இருக்கிறான் என்று விளக்கியிருக்கிறார். இதிலிருந்து இறையியல் போதனைகளில் ஒரு விஷயத்தில் நாம் தவறான முடிவுக்கு வந்தால் அது நம்மை அந்த விஷயம் தொடர்பான அத்தனைப் போதனை களிலும் தவறான முடிவை எடுக்கும்படிச் செய்துவிடும் என்பதை நாம் உணர்வது அவசியம். பெலேஜியஸின் தவறான முடிவு தவறான போதனையை உருவாக்கியது. அன்றைய திருச்சபைத் தலைவர்களில் முக்கியமானவரான ஆகஸ்தீன் பெலேஜியஸின் போதனையில் இருந்த தவறை உணர்ந்து அதிலிருந்து சபையைக் காப்பாற்ற நடவடிக்கை கள் எடுத்தார். ஆகஸ்தீனுடைய போதனைகளையே திருச்சபை ஏற்றுக் கொண்டது.

## ஆகஸ்தீன் (Augustine)

வட ஆபிரிக்காவின் கார்த்தேஜைச் (Carthage) சேர்ந்த அறிவாளியான ஆகஸ்தீன் கடவுளின் கிருபையைப் பற்றிய அருமையான நூலைத் திருச்சபைக்குத் தந்துள்ளார். கிருபையை நாம் விலைகொடுத்து வாங்க முடியாது. அதை அடையும் தகுதியும் நமக்குக் கிடையாது என்று விளக்கிய ஆகஸ்தீன், கிருபை இல்லாமல் இருக்க முடியாது என்கிறார். கிருபையால் மட்டுமே மனிதன் பாவத்தில் இருந்து விடுதலை அடைய முடியும் எனும் ஆகஸ்தீன் அது நிராகரிக்கப்பட முடியாதது, திட்ப உறுதியானது என்கிறார். அதாவது தெரிந்துகொள்ளப்பட்ட பாவியாகிய மனிதனைக் கர்த்தரிடம் கொண்டுவரக்கூடிய வல்லமையை அது கொண்டிருக்கிறது என்கிறார். கடவுளின் நித்திய திட்டத்தோடு தொடர்புடைய கிருபை அவருடைய முன்குறித்தலாகிய கிரியையோடு

பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது. கடவுளின் கிருபையைப் பற்றி ஆகஸ்தீன் தரும் போதனைகளை நாம் மனிதனின் வீழ்ச்சியின் பின்னணியில் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம். இதன் மூலமே பெலேஜியஸின் போதனைகளின் போலித்தனத்தை நாம் இனங்கண்டுகொள்ள முடிகிறது.

படைப்பில் மனிதன் பூரணமாக இருந்தாலும் பாவத்தை செய்துவிடக் கூடிய நிலையில் இருந்தான் என்கிறார் ஆகஸ்தீன். அவன் தொடர்ந்து நன்மையைச் செய்து வாழ, அவனுடைய பூரண நிலையிலும் கடவுளின் கிருபை அவனுக்கு துணை செய்தது என்றும், இருந்தபோதும் அந்தக் கிருபை அவன் அதில் தொடரும்படி அவனை வற்புறுத்தவில்லை என்றும் ஆகஸ்தீன் கூறினார். ஆதாம் பாவம் செய்யாமலிருக்கும் வல்லமையைக் கொண்டிருந்தபோதும் பாவத்தில் விழாமலிருக்கும் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை. ஆகஸ்தீனின் இந்த விளக்கங்கள் அவர் படைப்பில் மனிதனின் நிலையைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களை நாம் விளங்கிக்கொள்ள உதவுகின்றன. கடவுளால் ஒருபோதும் பாவம் செய்ய முடியாது. அவர் பூரண நீதியும், பரிசுத்தமும் உள்ளவர் மட்டுமல்ல, என்றும் மாறாதவராக இருக்கிறார். ஆனால், படைக்கப்பட்ட மனிதன் மாறாத தன்மையோடு படைக்கப்படவில்லை. மனிதன் மாறும் இயல்புள்ளவன். படைப்பில் ஆதாம் பாவத்தில் விழக்கூடிய மாறும் தன்மையோடு இருந்தபோதும் அதைச் செய்ய வேண்டிய அவசியம் அவனுக்கிருக்கவில்லை. அவனால் பாவம் செய்யாமலிருக்கும் வல்லமையிருந்தபோதும் பாவத்தை இலகுவாக செய்துவிடக்கூடியவனாகவும் இருந்தான். ஆதாம் பாவத்தில் வீழ்ந்தபோது அவனோடு முழுமனுக்குலமும் பாவத்தை அனுபவித்தது. இந்த விஷயத்தில் பெலேஜியஸினுடைய போதனையோடு ஆகஸ்தீன் முரண்படுகிறார். ஆதாமின் பாவம் அவனை மட்டும் பாதித்ததாக பெலேஜியஸ் வாதிடுகிறார்.

பாவத்திற்கும் மரணத்திற்கும் இடையில் பெரும் தொடர்பிருப்பதாக ஆகஸ்தீன் விளக்கினார். அதைத்தான் பவுல் அப்போஸ்தலனும் புதிய ஏற்பாட்டில் விளக்கியிருக்கிறார். எல்லா மனிதர்களும் இறப்பார்கள். அதற்குக் காரணம் எல்லா மனிதர்களும் பாவம் செய்திருப்பதுதான். பாவத்திற்குப் பிறகு மரணம் எல்லோருக்கும் ஏற்பட்டது. பாவத்தின் காரணமாக மனிதன் இறப்பதைத் தவிர்த்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறான். இதிலிருந்து பெலேஜியஸினுடைய போதனைகளுக்கும் ஆகஸ்தீனுடைய போதனைகளுக்கும் இடையில் இருந்த பெரும் வேறுபாட்டை நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது. பெலேஜியஸைப் பொறுத்தவரையில் ஆதாம் தனி மனிதனாக மட்டுமே செயல்பட்டான், அவனுக்கும் மனுக்குலத்துக்கும் தொடர்பிருக்கவில்லை. அவன் மனுக்குலத்தின் பிரதிநிதியல்ல. ஆனால், ஆகஸ்தீன் பவுலைப் போல, ஆதாமை மனுக்குலத்தின் பிரதிநிதியாகக் கணித்தார். மனிதனைப் பற்றியும் பாவத்தைப் பற்றியும் பெலேஜியஸ் அளித்த போதனைகளைத் தோலுரித்துக் காட்ட கடவுள் எழுப்பிய மனிதன் ஆகஸ்தீன்.

## மனித சித்தத்தின் நிலை பற்றிய ஆகஸ்தீனின் விளக்கம்

| | |
|---|---|
| ஏதேனில் இருந்தபோது | பாவத்தில் விழுந்துவிடவும் விழாமல் இருக்கவும் கூடிய நிலை |
| மூல பாவத்திற்குப் பின் | பாவத்தை செய்யாமலிருக்க முடியாத நிலை |
| கிருபையை அடைந்தபின் | பாவத்தைச் செய்யாமல் இருக்கக் கூடிய நிலை |
| பரலோகத்தில் | பாவத்தை செய்ய முடியாத நிலை |

ஆதாமின் வீழ்ச்சியினால் (மூல பாவத்தினால்) மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் எட்டுவகைப் பாதிப்புகளை பிலிப் ஷ்சாப் (Philip Schaff) என்கிறவர் பின்வருமாறு விளக்குகிறார்.

1. மனிதன் மாறுந்தன்மையுள்ளவனாகப் படைக்கப்பட்டிருந்த படியால் அவனால் தன்நிலையிலிருந்து விழ முடிந்தது. அவன் நன்மையானவனாக படைக்கப்பட்டிருந்தபோதும் மாறுந்தன்மையுள்ளவனாக (mutable) இருந்தான்.

2. வீழ்ச்சி மனிதன் தன் சுதந்திரத்தை இழக்கச் செய்தது. படைப்பில் அவன் நன்மையை சுதந்திரமாகச் செய்து தீமையைச் செய்யாதிருக்கும் சுதந்திரத்தையும் கொண்டிருந்தான். இப்போது அவன் நன்மை செய்யும் சுதந்திரத்தை இழந்ததோடு தீமைக்கு அடிமையாகவும் மாறிவிட்டான்.

3. வீழ்ச்சி மனிதன் தடைகளேதும் இல்லாமல் அறிவைப் பெறவும் அதில் வளரவும் இயலாமல் செய்தது. மனிதனுடைய இருதயம் வீழ்ச்சியால் இருளடைந்து அவனுடைய மனம் சிந்தனைக் கோளாறுள்ளதாக மாறியது.

4. வீழ்ச்சியால் மனிதன் கடவுளின் கிருபையை இழந்தான்.

5. வீழ்ச்சியால் மனிதன் பரலோகமான ஏதேனை இழந்தான்.

6. வீழ்ச்சி தீமையை இச்சிக்கும் மாம்ச இருதயத்தை மனிதனுக்கு ஏற்படுத்தியது.

7. வீழ்ச்சி மனிதனுக்கு மரணத்தை ஏற்படுத்தியது.

8. வீழ்ச்சி மனிதனுக்கு ஆதாமிலிருந்து பாவத்தின் குற்றவுணர்வை வரச்செய்தது. (பெலேஜியஸ் இதை மறுத்தார். பாவம் வெறும் நடத்தை மட்டுமே என்றார். ஆனால், வேதம் அது நம்முடைய முதல் பெற்றோரிடமிருந்து நமக்கு வந்ததாக விளக்குகிறது.)

## பாவம் எந்தளவுக்கு மனித சித்தத்தைப் பாதித்தது?

இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் விசுவாச அறிக்கை, 'இரட்சிப்போடு கூடிய எந்தவித ஆவிக்குரிய நன்மைகளையும் செய்யக்கூடிய தனது சித்தத்தின் வல்லமையைப் பூரணமாக மனிதன் இழந்தான்' (9:3) என்கிறது. விசுவாச அறிக்கை இதற்கு அடுத்த 10வது அதிகாரத்தில் இரட்சிப்போடு தொடர்புடைய சத்தியங்களை விளக்கவிருப்பதால் இந்த இடத்தில் அதோடு தொடர்புடைய மனித சித்தத்தின் சுயாதீனத்தைப் பற்றி விளக்குகிறது. ஆதியாகமம் 3:9–12 வரையுள்ள வசனங்களில் கடவுள் ஆதாமோடு நடத்திய சம்பாஷனையைப் பார்க்கிறோம். கர்த்தர் ஆதாமைப் பார்த்து, 'நீ எங்கே இருக்கிறாய்' என்று கேட்கிறார். அதற்கு ஆதாம், 'நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்தில் கேட்டு . . . பயந்து ஒளிந்துகொண்டேன்' என்கிறான். இங்கே தன்னைப் படைத்த தேவனாகிய கடவுளிடம் இருந்து மனிதன் விலகியோடுவதைப் பார்க்கிறோம். தான் செய்த பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்காமல் அத்தியிலைகளால் தன் நிர்வானத்தை (தன் பாவத்தை) மறைத்துக்கொண்டு கடவுளைவிட்டு ஓடப்பார்க்கிறான் ஆதாம். அவனுடைய சித்தத்தைப் பாவம் பாதிக்கத்தானே செய்திருக்கிறது. கடவுளோடு ஐக்கியத்தில் இருப்பதை விரும்பிச் செய்து வந்திருந்த சித்தம் பாவத்தினால் இப்போது கடவுளை விட்டு ஓடப்பார்க்கிறது. ஆதாம் பாவத்தில் விழுந்திருப்பதால் அவனால் கடவுளோடு ஐக்கியத்தில் வர முடியவில்லை. மன்னிப்பு கேட்கிற இருதயமும் அவனுக்கு இல்லை. கடவுளைவிட்டு அவனால் ஓடத்தான் முடிகின்றது. தான் செய்த பாவத்தில் இருந்து தப்புவதற்கு அவன் ஏவாளைக் குற்றஞ்சாட்டுகிறான். ஏன், அவளை உருவாக்கி அவனுக்களித்த கடவுளையே குற்றஞ்சாட்டுகிறான் (தேவரீர் தந்த ஸ்திரீ). இதிலிருந்து என்ன தெரிகிறது? பூரணமாக கடவுளின் வார்த்தைகளைக் கேட்டு நன்மைகளை செய்து வந்திருந்த ஆதாமின் சித்தம் அதற்கு எதிரான அனைத்தையும் செய்ய ஆரம்பித்துவிட்டதை நாம் கவனிக்கவில்லையா? பாவத்தில் விழுந்த ஆதாமால் இனி நன்மைகளை செய்ய முடியவில்லை. நன்மையாக சிந்திக்க முடியவில்லை. ஆவிக்குரிய சிந்தனைகளையும் வழிமுறைகளையும் பின்பற்றிப் போகக்கூடிய வல்லமையை அவனுடைய சித்தம் முற்றாக இழந்துவிட்டது. அவனால் ஆவிக்குரிய காரியங்களுக்கு எதிராகப் போகத்தான் முடிந்தது.

மனிதனைப் பற்றி விளக்கும் வேதம் அவன் கடவுளுக்கு எதிரியாக இருக்கிறான் என்கிறது. அதற்குக் காரணம் அவனுடைய இருதயம் அவனைக் கடவுளிடம் இருந்து விலகியோடும்படிச் செய்கிறது. இயற்கையாக கடவுளை நாடும் இருதயத்தை அவன் கொண்டிருக்கவில்லை. ரோமர் 1:30, மனிதன் கடவுளை வெறுக்கிறான் (தேவபகைஞன்) என்கிறது. அதற்குக் காரணம் என்ன? அத்தகைய இருதயம் அவனுக்கு இருப்பதால்தான். மூல பாவம் அவனைப் பாவியாக்கி கடவுளை வெறுத்து அவரிடம் இருந்து ஆதாமைப்போல ஒதுங்கியோடி ஒளிந்துகொள்ளும்படிச் செய்கிறது. அவனால் கடவுளுடைய கட்டளைகளை நேசிக்க முடியாமல் இருக்கிறது. கடவுளைப் பற்றிய எதையும் விரும்பி நாடும்படியாக அவனுடைய

*தன்மையில் எதுவுமே இல்லை. பாவம் அவனில், சித்தம் உட்பட அனைத்துப் பாகங்களையும் பாதித்து கடவுள் விரோதியாக மாற்றிவிட்டிருக்கிறது. மனிதனுடைய சித்தத்தைப் பாவம் இந்த வகையில் பாதித்திருப்பதை நாம் ஆதாம், ஏவாளில் இருந்து தெளிவாக அறிந்துகொள்ளுகிறோம்.*

## மனிதன் பூரணமாகப் பாவத்தில் மரித்திருக்கிறான்

*பாவத்தில் வீழ்ந்திருக்கும் மனிதனின் நிலையை விளக்கும் விசுவாச அறிக்கை, 'இயல்பாகவே மனிதன் ஆவிக்குரிய நன்மைகளை முற்றிலும் எதிர்ப்பவனாகவும் பாவத்தில் மரித்தவனாகவும் உள்ளான்' என்கிறது (9:3). 'பாவத்தில் மரித்தவனாக உள்ளான்' என்கிற வார்த்தை பிரயோகம் அவனைப் பாவம் முழுமையாகப் பாதித்திருக்கின்றது என்பதை உணர்த்தப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. செத்த பிணத்தில் உயிரில்லை என்பது நமக்குத் தெரியும். அதனால் அசைய முடியாது. அதேபோல பாவத்தில் மரித்திருக்கிற மனிதன் ஆவிக்குரிய எதையும் செய்யமுடியாதபடி செத்த பிணம்போல இருக்கிறான். ஆவிக்குரிய எதையும் அவனால் அணுவளவும் செய்ய முடியாது. ஆவிக்குரிய விதத்தில் சிந்திக்கவோ, செயல்படவோ அவனால் ஒருக்காலும் முடியாது. இதைத்தான் கல்வினிச ஐங்கோட்பாடுகளில் ஒன்றான, மனிதனின் 'முழுமையான சீர்குலைவு'* (Total Depravity) *என்ற போதனை விளக்குகின்றது. இதோடு தொடர்புடைய இன்னுமொரு போதனைதான் மனிதனின் 'முழுமையான இயலாமை' என்பதும்* (Total Inability). *இவை இரண்டும் பாவம் மனிதனை எந்தளவுக்குப் பாதித்திருக்கின்றது என்ற விஷயத்தை விளக்கப் பயன்படுத்தப்படும் இரு இறையியல் வார்த்தைப் பிரயோகங்கள்.*

*'முழுமையான சீர்குலைவு' என்ற வார்த்தைப் பிரயோகம் பாவம் மனிதனின் அத்தனைப் பாகங்களையும் ஒன்றுவிடாமல் தொட்டுச் சீர்குலைத்திருக்கிறது (கறைபடுத்தியிருக்கிறது) என்பதை விளக்குகிறது. பாவத்தால் கறைபடுத்தப்படாத அல்லது சீர்குலையாத அம்சங்கள் மனிதனில் எதுவும் இல்லை என்பதைக் குறிக்கத்தான் 'முழுமையான' என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'முழுமையான இயலாமை' என்ற வார்த்தைப் பிரயோகம் முக்கியமாக மனிதனின் சித்தத்தின் தன்மையை விளக்கப் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, பாவம் மனிதனின் சித்தத்தை அடியோடு பாதித்து அவன் இரட்சிப்புக்குரிய, ஆவிக்குரிய சிந்தனையைக் கொண்டிருந்து எந்தவிதத் தீர்மானங்களையும் எடுக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுகின்றது.*

*சிலர் இந்த வார்த்தைப் பிரயோகங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு சீர்திருத்த கிறிஸ்தவர்கள் மனிதன் ஒன்றுக்கும் ஆகாதவன் என்று போதிக்கிறார்கள் என்று கதைகட்டி விட்டிருக்கிறார்கள். நிச்சயமாக சீர்திருத்த கிறிஸ்தவம் அப்படிப் போதிக்கவேயில்லை. மேலெழுந்தவாரியாக இறையியல் போதனைகளைக் கவனித்து ஒரு முடிவுக்கு வருவது ஆபத்து. சீர்திருத்த கிறிஸ்தவம் பாவத்திற்குப் பிறகு மனிதன் தொடர்ந்து கடவுளின்*

சாயலில் இருப்பதாக விளக்குகிறது. அதன் காரணமாக அவன் மனிதனாக மனிதனுக்குரிய சிந்தனைத் திறமை, அறிவுத் திறமை, செயல் திறமைகளைக் கொண்டிருப்பதாக நிச்சயம் போதிக்கிறது. கடவுளின் பொதுவான கிருபையின் காரணமாக மனிதன் ஒழுக்கத்தில்கூட சீர்திருத்தத்தைத் தன்னுடைய வாழ்க்கையில் ஓரளவுக்குக் கொண்டுவர முடியும் என்று சீர்திருத்த கிறிஸ்தவம் விளக்குகிறது. அவனால் மற்றவர்கள் மீது கருணை காட்டி உதவிகளைச் செய்ய முடியும் என்று விளக்குகிறது. பாவத்தில் இருந்தபோதும் இதையெல்லாம் மனிதன் தடையில்லாமல் செய்ய முடியும். அதை சீர்திருத்த கிறிஸ்தவம் ஒருபோதும் மறுத்ததில்லை. மனிதனைக் கையா லாகாதவனாக உருவகித்துக் காட்ட சீர்திருத்த கிறிஸ்தவம் ஒருபோதும் முயன்றதில்லை. இப்படியிருக்கும்போது மனிதன் ஒன்றுக்கும் உதவாதவன் என்று சீர்திருத்த கிறிஸ்தவம் போதிப்பதாக எப்படிச் சொல்ல முடியும்?

ஆதாமின் பாவம் மனிதனில் ஆத்மீகக் குறைபாட்டை மட்டும் ஏற்படுத் தாமல் வேறுவிதங்களிலும் அவனைப் பாதித்திருப்பது உண்மைதான். மனிதன் தொடர்ந்தும் அறிவுத் திறனையும், செயல் திறனையும் கொண்டவனாக இருந்தபோதும் ஆதாமைப் போன்ற செயல்திறனைக் கொண்டவனாக இன்று இல்லை என்று நிச்சயம் சொல்ல முடியும். ஏனெனில், ஆதாம் ஏதேனில் இருந்து செய்த எதிலும் குறைபாடு இருக்கவில்லை. ஆதாம் கடவுள் படைத்த அனைத்திற்கும் பெயர் வைத்தபோது அவற்றில் கடவுள் எந்தக் குறையையும் காணவில்லை என்பதை நினைத்துப் பாருங்கள். அந்தளவுக்கு அவன் அறிவுத் திறன் கொண்டவனாக இருந்திருக்கிறான். ஆதாம் நிலத்தைப் பண்படுத்தி பயிர்களை விளைவித்தபோது எல்லாமே எப்போதும் குறையில்லாமல் பலன் கொடுத்து வந்திருந்தன. அவனுடைய செயல்கள் அனைத்திலும் எந்தக் குறையும் இருக்கவில்லை. இன்றைக்கு பாவத்தில் இருக்கும் மனிதன் எத்தனைத் திறமையான காரியங்களை செய்தாலும் அவற்றில் குறைபாடுகள் இருக்கின்றன. இன்று மனிதன் எத்தனை கடுமையாக உழைத்தபோதும் அதற்கான பலனை அவன் நிச்சயமாக அடைய முடியும் என்று சொல்ல முடியாது. மனிதனுடைய அறிவும் இன்று குறைபாட்டோடுதான் இருக்கின்றது. இதெற்கெல்லாம் பாவம்தான் காரணம் என்பதை யாரால் மறுக்க முடியும்?

'முழுமையான சீர்குலைவு' எனும் போதனையும், 'முழுமையான இயலாமை' எனும் போதனையும் பாவத்தில் இருக்கும் மனிதனின் ஆத்மீக நிலையைப் பற்றி விளக்குகின்ற வார்த்தைப் பிரயோகங்கள். அவற்றை வேறு எதோடும் தொடர்புபடுத்தி விளக்கமளிப்பது தவறான செயலாகும். கடவுளோடு இருக்கக்கூடிய உறவைப் பொறுத்தவரையில் ஆதாமுக்கு இருந்த ஆத்மீக வல்லமையை பாவத்தின் காரணமாக அவன் இழக்க நேர்ந்தது. ஏதேனில் இருந்து வெளியேற்றப்பட்ட பிறகு ஆதாமால் கடவுளோடு தொடர்ந்து உறவு வைத்துக்கொள்ள முடியவில்லை. பாவம் அவனுடைய இருதயத்தைப் பாழாக்கி கடவுளைவிட்டு ஓடச் செய்தது. அவனுடைய சந்ததிகளாகிய நாமும் ஆத்மீகத்தைப் பொறுத்தவரையில் கடவுளைவிட்டு விலகியோடச் செய்ய வைக்கும் இருதயத்தோடுதான் இருக்கிறோம். இதைத்தான் மேலே நாம் பார்த்த வார்த்தைப்

பிரயோகங்கள் விளக்குகின்றன. சுயமாக மனிதன் கடவுளை நாடக்கூடிய, அவருடைய கட்டளைகளை நேசிக்கக்கூடிய, அவரை அறிந்துகொள்ளத் துடிக்கும் இருதயத்தை இன்று கொண்டிருக்கவில்லை. அந்தளவுக்கு பாவம் மனிதனைப் பாதித்து ஆத்மீக வல்லமையில்லாதவனாக அவனை மாற்றியிருக்கிறது. இந்த நிலையில் இருக்கும் மனிதனின் சித்தம் மட்டும் வித்தியாசமான நிலையில் இருக்க முடியுமா? கடவுளை நாட இயலாத இருதயமுள்ள மனிதனின் சித்தம் கடவுளை நேசிக்கும் தீர்மானத்தை எடுக்கும் வல்லமையில்லாததாக இருக்கிறது. எத்தனையோ விஷயங்களில் துணிந்து விரும்பி தீர்மானங்களை எடுக்கும் மனிதன் கடவுளைப் பொறுத்தவரையில் அவரைப் புரிந்துகொள்ள முடியாதவனாகவும், அவரை வெறுக்கிறவனாகவும் இருந்து அவருக்கெதிரான தீர்மானங்களை மட்டுமே எடுக்கக் கூடிய சித்தங்கொண்டவனாக இருக்கிறான். இதைத் தான் 'முழுமையான இயலாமை' எனும் வார்த்தைப் பிரயோகம் சுட்டிக் காட்டுகிறது.

பெலேஜியஸ், மனித சித்தத்தின் இயலாமையை நம்ப மறுத்து மனிதனை ஆதாமின் பாவம் பாதிக்கவில்லை என்றும், அவனுடைய சித்தம் கடவுளை நாடிப் போகக்கூடிய வல்லமையோடு இருப்பதாகவும் விளக்கினார். வேதம் பெலேஜியஸின் போதனைகளை நிராகரிக்கிறது. 'அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை' என்கிறது வேதம் (யோவான் 1:10). 'அவருக்கு சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை' என்கிறது யோவான் 1:11. இதற்குக் காரணம் உலகம் பாவத்தில் இருப்பதுதான். '. . . உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை' (யோவான் 5:40). 'உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன். நான் பிதாவின் நாமத்தினால் வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை . . . (யோவான் 5:42-43). இவ்வாறெல்லாம் வேதம் சொல்லுவதற்குக் காரணமென்ன? மனிதன் பாவத்தினால் இருதயம் சீர்குலைந்து கடவுளை நாட முடியாத சித்தத்தைக் கொண்டிருப்பதுதான். பாவம் அந்தவகையில் முழு மனுக்குலத்தையும் சீர்குலைத்து கடவுளை விட்டு வெகு தூரத்தில் போகச் செய்திருக்கிறது. கடவுளின் உள்ளார்ந்த (Internal), திட்ப உறுதியான கிருபையின் (Effectual call) மூலம் மறுபிறப்பை (Regeneration) அடைந்து அதன் மூலம் புதுப்பிக்கப்பட்ட சித்தத்தால் மட்டுமே மனிதன் கடவுளை விசுவாசித்து இரட்சிப்பை அடைய முடியும்.

வாசகர்கள் திருமறைத்தீப ஆக்கங்களைக் குறித்த தங்களுடைய எண்ணங்களையும் கேள்விகளையும் ஆசிரியருக்கு நேரடியாகவோ அல்லது பத்திரிகையின் பின் பக்கத்திலுள்ள சென்னை முகவரிக்கோ அல்லது இணையதளத்தின் மூலமாகவோ தெரியப்படுத்தலாம். வாசகர்களின் கேள்விகளுக்கு ஆசிரியர் பதிலளிப்பதோடு மற்றவர்களுக்கும் பயன் தரும் கேள்விகளாயிருப்பின் அவைகள் திருமறைத்தீபத்திலும் வெளியிடப்படும். - **ஆசிரியர்**

# நீயும் நானுமா?

இதென்ன இப்படியொரு தலைப்பு என்று நீங்கள் மலைக்கலாம். இந்தத் தலைப்பை நான் கொடுத்ததற்கு காரணமிருக்கிறது. இந்த வார்த்தைகளை, கிறிஸ்தவ இறையியல் கோட்பாட்டைப் பொறுத்தவரையில் பொதுவாகப் அநேகரிடம் இன்று இருந்து வருகின்ற எண்ணங்களை விளக்குவதற்காக நான் பயன்படுத்தியிருக்கிறேன். இதற்கு முந்தைய ஆக்கத்தில் பாவம் எந்தளவுக்கு மனிதனைப் பாதித்து அவனுடைய சித்தத்தைக் கட்டுப்படுத்துகிறது என்பதை ஆராய்ந்திருக்கிறோம். பெலேஜியஸ், மூல பாவம் (Original sin) எனும் கோட்பாட்டை மறுத்து மனிதன் கடவுளுடைய கட்டளையை ஏதேனில் மீறியபோது அந்தச் செயல் வெறும் தவறான நடத்தை மட்டுமே என்றும், அந்த நடத்தை அவனை ஆவிக்குரிய விதத்தில் சீர்குலைக்கவில்லை என்றும் போதித்தார் என்பதைக் கண்டோம். பெலேஜியஸின் போதனைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தி புதிய போதனைகள் அவருக்குப் பின்னால் வரலாற்றில் உருவாகின. அந்தப் போதனைகள் இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் பொதுவாகவே எல்லா நாடுகளிலும் தொடர்ந்து இருந்துவருகின்றன. இந்தப் போதனைகளின் அடிப்படை அம்சம், மனிதன் இரட்சிப்பை அடைவதில் கடவுளும் மனிதனும் சமமாக இணைந்தே செயல்படுகிறார்கள் என்பதுதான். அதனால் தான் கடவுள் மனிதனைப் பார்த்து 'நீயும் நானுமா!' என்று கேட்பதுபோல் தலைப்பைக் கொடுத்திருக்கிறேன்.

### மொனர்ஜிசமும் (Monergism), சினர்ஜிசமும் (Synergism)

மேலே நான் குறிப்பிட்ட புதிய போதனைகளின் அடிப்படையான தவறை விளக்கவும், வேத சத்தியங்களைத் தெளிவாக சுட்டிக் காட்டவும் இறையியல் வல்லுனர்கள் தகுந்த வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படியாக இறையியல் போதனைகளை விளக்கக் குறிப்பிட்ட பதங்களைப் பயன்படுத்தும் வழக்கம் எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. அதில் எந்தத் தவறுமேயில்லை. குறிப்பாக கடவுளில் மூன்று ஆள் தத்துவங்கள் காணப்படுகின்றன என்பதை விளக்குவதற்கு 'திரித்துவம்' என்ற பதத்தை கிறிஸ்தவர்கள் பயன்படுத்தி வரவில்லையா? இந்தப் பதம் வேதத்தில் காணப்படாதபோதும் இது மிகவும் அவசியமான வார்த்தைப் பிரயோகம். இதேபோல்தான் பெலேஜியஸின் தவறான போதனைகளைத் தழுவி உருவான போதனைகளை வெளிப்படுத்தவும், அவற்றிற்கு மாறான வேதபோதனைகளை சுட்டிக்காட்டவும் வார்த்தைப் பிரயோகங்களை இறையியல் வல்லுனர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். இந்த வார்த்தைப் பிரயோகங்கள்தான் மொனர்ஜிசம் (Monergism), சினர்ஜிசம் (Synergism) என்பவை.

இந்த இரண்டு ஆங்கில வார்த்தைகளுமே கிரேக்கத்தைத் தழுவியவை. மொனர்ஜிசத்தில் 'மொனோ' என்ற கிரேக்க வார்த்தைக்கு 'ஒன்று' என்றும் அதன் அடுத்த பகுதியான 'எர்கொன்' என்பதற்கு 'கிரியை' என்றும் பொருள். இந்த வார்த்தையின் பொருள் 'ஒருவரின் கிரியை' என்பதாகும். சினர்ஜிசத்தில், காணப்படும் 'சின்' என்ற கிரேக்க வார்த்தைக்கு 'இரண்டு' என்பது பொருள். ஆகவே இந்த வார்த்தைக்கு 'இருவரின் கிரியை' என்பது பொருள். இந்த வார்த்தைகளின் மூலம் எந்த இறையியல் கருத்தை இறையியல் அறிஞர்கள் விளக்கப் பார்க்கிறார்கள் என்பதுதான் அடுத்த கேள்வி.

பாவம் மனிதனை அடியோடு பாதித்து சீர்குலைத்து அவனை ஆவிக்குரிய எதையும் செய்ய முடியாத நிலையில் வைத்திருக்கிறது என்று வட ஆபிரிக்காவின் கார்த்தேஜில் பணிபுரிந்த இறையியல் அறிஞரான ஆகஸ்தீன் விளக்கினார் என்று பார்த்தோம். பெலேஜியஸின் போதனையான மனிதனைப் பாவம் பாதிக்கவில்லை என்ற விளக்கத்தை நிராகரித்து ஆகஸ்தீன் இவ்வாறு போதித்திருந்தார். ஆகஸ்தீனுடைய போதனையையே 16ம் நூற்றாண்டில் லூத்தரும், கல்வினும் தொடர்ந்து போதித்தார்கள். இவர்கள் எல்லோருமே பாவம் மனிதனை ஆவிக்குரிய எதையும் செய்ய முடியாத நிலையில் வைத்திருப்பதால் கடவுள் அவனுடைய இருதயத்தை மாற்றினால் தவிர அவனால் ஆவிக்குரியவற்றை செய்ய முடியாது என்று விளக்கியிருந்தார்கள். இவ்வாறாக ஆவிக்குரிய விஷயத்தில் கடவுள் மட்டுமே மனிதனின் இரட்சிப்புக்குரியவற்றை செய்கிறார் என்பதையே 'மொனர்ஜிசம்' விளக்குகிறது. மொனர்ஜிசக் கருத்தைக் கொண்டிருப்பவர்கள் பாவம் மனிதனைக் கட்டுப்படுத்தி ஆளுவதால் அவனுடைய சித்தமும் அதற்குக் கட்டுப்பட்டு கடவுளுக்கு எதிரானதை மட்டுமே நாடும் என்றும் நம்பினார்கள்.

இதற்கு மாறாக 'சினர்ஜிசம்' இரட்சிப்பு மனிதனில் நிறைவேற கடவுளும் மனிதனும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்று விளக்குகிறது. அதாவது, கடவுள் இரட்சிப்புக்குரியவற்றை கிறிஸ்து மூலம் நிறைவேற்றியிருந்த போதிலும் மனிதன் இரட்சிப்படைய வேண்டும் என்று தன் சித்தத்தில் தீர்மானித்து கடவுளோடு ஒத்துழைப்பதால் மட்டுமே இரட்சிப்பை அடைய முடியும் என்கிறது. இரட்சிப்பை மனிதன் அடைகிற விஷயத்தில் கடவுள் பாதிப் பங்கையும், மனிதன் பாதிப் பங்கையும் கொண்டிருப்பதாக விளக்குவதுதான் 'சினர்ஜிசம்'. இதனால்தான் 'நீயும் நானுமா?' என்ற தலைப்பைக் கொடுத்திருக்கிறேன். இரட்சிப்பில் கடவுளுக்குப் பாதிப் பங்கிருக்கிறது, மனிதனுக்குப் பாதிப் பங்கிருக்கிறது என்ற போதனை எப்படி உருவாகியது என்பதை அறிந்துகொள்ள வேண்டுமல்லவா? அதை இனிக் கவனிப்போம்.

## செமி-பெலேஜியனிசம் (Semi-Pelagianism)

பெலேஜியஸினுடைய போதனைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய போதனையான செமி-பெலேஜியனிசத்தை உருவாக்கியவருக்குப் பெயர் கேசியன் (Cassian). செமி-பெலேஜியனிசத்தைக் 'கேசியனிசம்' என்றும்

அழைக்கலாம். கேசியன் மார்சீலியாவைச் சேர்ந்தவர். அவர் ரோமன் கத்தோலிக்க மதத் துறவி. ஆகஸ்தீனைப் போல கேசியன் மூல பாவத்தை நம்பினார். இந்த விஷயத்தில் அவர் பெலேஜியஸினுடைய போதனையைப் பின்பற்றவில்லை. ஆகவே செமி-பெலேஜியனிசம் ஆதாமிலிருந்து தொடர்கின்ற மூல பாவத்தை மறுதலிக்கவில்லை. கேசியன் கடவுளுடைய கிருபை எல்லோருக்கும் பொதுவானது என்றும், வீழ்ச்சியுற்ற மனிதன் முழுப் பொறுப்புணர்வையும் கொண்டவன் என்றும் நம்பினார். இந்த இரண்டையும் சம நிலையில் நியாயப்படுத்தும் கேசியனுடைய முயற்சிதான் செமி-பெலேஜியனிசம் உருவாகக் காரணமானது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, 'இதில் என்ன பிரச்சனை இருக்கிறது, இதைத்தானே ஆகஸ்தீனும் விசுவாசித்தார்' என்று சொல்லத் தோன்றும். ஆகஸ்தீனும் கடவுளுடைய கிருபையையும், இறையாண்மையையும் வலியுறுத்துவதில் உறுதியாக இருந்தார்.

பெலேஜியஸின் போதனைகளை நிராகரித்த கேசியன் ஆதாமின் பாவம் முழு மனிதகுலத்தையும் பாதித்து அவர்களில் தொடர்வதாக விளக்கினார். அதேநேரம் அவர் ஆகஸ்தீனுடைய போதனைகளையும் குறைகூறத் தவறவில்லை. முன்குறித்தலாகிய போதனையும், குறிப்பிடப்பட்டவர்களுக்கான கிருபையும் பாரம்பரியமாக சபைப் போதனைகளாக என்றுமே இருக்கவில்லை என்று கேசியன் வாதம் செய்தார். பாவத்தினால் ஆதாமினுடைய சித்தத்தின் சுயாதீனம் பாதிக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளுகிற கேசியன் அது மனிதர்களில் பலவீனமானதாக இருப்பதாகவும் ஒத்துக்கொள்ளுகிறார். பாவத்தின் காரணமாக மனிதனில் சித்தம் முற்றாக அழிந்துவிடவில்லை என்றும், அதேநேரம் அது ஒழுக்கரீதியாக பூரண பலவீன நிலையிலும் இல்லை என்கிறார் கேசியன். இந்த இடத்தில்தான் கேசியன் ஆகஸ்தீனோடு (வேதத்தோடும்) முரண்படுகிறார். ஆகஸ்தீன் பாவத்தினால் மனித சித்தம் கடவுளை நாடிப்போகக்கூடிய ஒழுக்கரீதியான வல்லமையை இழந்துவிட்டது என்று விளக்கினார். இதை கேசியன் நிராகரித்தார்.

நீதிமானாக இருப்பதற்கு கிருபை அவசியம் என்று பெலேஜியஸுக்கு எதிராக அறைகூவலிட்ட கேசியன், அந்தக் கிருபை நிராகரிக்கக்கூடியதாக இருக்கிறது என்று ஆகஸ்தீனுடைய போதனைக்கு எதிரான விளக்கத்தை அளித்தார். கிருபை திட்ப உறுதியானதாக (effectual) இருக்க வேண்டுமானால், அதாவது மனிதனை இரட்சிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமானால் மனிதனுடைய ஒத்துழைப்பு கடவுளுக்குத் தேவை என்று கேசியன் சொன்னார். இந்த இடத்தில் கேசியனுடைய மனப்போக்கைப் புரிந்துகொள்ளுவது அவசியம். கடவுளுடைய கிருபை இல்லாமல் எந்த ஆவிக்குரிய நன்மையையும் நாம் செய்யமுடியாது என்று கூறுகிற கேசியன் நம்முடைய சுயாதீனமான சித்தமும் அந்த விஷயத்தில் பங்குகொள்ளாமல் இருக்க முடியாது என்று விளக்குகிறார்.

ஆகஸ்தீனுக்கும் கேசியனுக்கும் இடையில் உள்ள முக்கியமான வேறுபாடு அவர்கள் இருவரும் கிருபையைப் பற்றித் தந்த போதனையில்

இருந்தது. ஆகஸ்தீன் கிருபை நிராகரிக்க முடியாதது என்றார். பாவத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மனித சித்தம் இப்போதும்கூட எத்தனையோ விஷயங்களில் சுயமாக தீர்மானங்களை எடுக்கக்கூடிய நிலையில் இருந்தபோதும் ஆத்மீக ரீதியில் அது கர்த்தரை நோக்கித் திரும்பக்கூடிய வல்லமையோடு இல்லை என்றார் ஆகஸ்தீன். மனித சித்தம் பலவீனமான நிலையில் அல்ல, ஆவியில் மரித்திருக்கிறது என்றார் ஆகஸ்தீன். திட்ப உறுதியான கடவுளின் கிருபையால் மட்டுமே மனித சித்தத்தைப் புதுப்பித்து அவரை விசுவாசிக்கும்படி செய்ய முடியும் என்பது ஆகஸ்தீனின் விளக்கம்.

ஆகஸ்தீனுடைய போதனைக்கும் கேசியனுடைய போதனைக்கும் இடையில் இருந்த வேறுபாடு தெரிகிறதா? இரட்சிப்பின் ஆரம்பப் படிநிலையைக் குறித்து மொனர்ஜிசத்துக்கும் சினர்ஜிசத்துக்கும் இடையில் இருந்த வேறுபாடே அது. பாவியாகிய மனிதன் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு அவசியமான ஆரம்பப் படிநிலை குறித்த விஷயத்தில் கேசியன் அழுத்தமாக சினர்ஜிசப் போக்கைக் கொண்டிருந்தார். அவரைப் பொறுத்தவரையில், கடவுள் மனிதனுக்கு கிருபையை அளிக்கிறார், இருந்தபோதும் பாவி தன்னுடைய பலவீனமான சித்தத்தைப் பயன்படுத்தி கடவுளோடு ஒத்துழைத்தால் மட்டுமே அவனுக்கு மறுபிறப்பு கிடைக்கிறது. ஆகவே, கேசியனைப் பொறுத்தவரையில் இரட்சிப்பின் படிமுறையில் மறுபிறப்புக்கு முன்பு விசுவாசம் வருகிறது. ஆனால், ஆகஸ்தீனைப் பொறுத்தவரையில் மறுபிறப்பாகிய கிருபை மொனர்ஜிசத்தைச் சார்ந்தது. எனவே, விசுவாசம் ஏற்படுவதற்கு முன் ஒருவனில் மறுபிறப்பாகிய கிருபை முதலில் நிகழ வேண்டியது அவசியம் என்கிறார் ஆகஸ்தீன். ஆகஸ்தீன், கிருபை நிராகரிக்க முடியாதது (irresistible) என்கிறார். ஆகவே, அது திட்ப உறுதியானது (effectual). அதாவது, அது இரட்சிக்கும் வல்லமை கொண்டது. கடவுள் தான் அநாதி காலத்தில் தீர்மானித்து ஏற்படுத்திய திட்டத்தை சுயமாக எவருடைய துணையுமின்றி நிறைவேற்றுகிறார் (Monergistic) என்கிறார் ஆகஸ்தீன். அவ்வாறு செய்கிறபோது அவர் பாவியை அவனுடைய சித்தத்துக்கு எதிராக வலுக்கட்டாயமாக இழுத்து அவன் செய்ய விரும்பாததை செய்ய வைக்கவில்லை. கடவுளின் மறுபிறப்பாகிய கிருபை மனிதனுடைய இருதயத்தை மாற்றியமைத்து அவனை ஆவிக்குரிய மரணத்தில் இருந்து விடுவித்து ஜீவனை அளிக்கிறபோது அவனால் கடவுளை சுயாதீனமாக விசுவாசிக்க முடிகிறது. அவ்விசுவாசத்தைக் கொண்டிருக்கின்ற மனிதனைக் கடவுளிடம் வரும்படிச் செய்கின்ற இரட்சிப்பாகிய கிருபையின் இந்த ஆரம்ப நிலையில் கடவுள் தன்னிச்சையாக எவருடைய துணையுமின்றி செயல்படுகிறார் (Monergistic).

## செமி-பெலேஜியனிச ரோமன் கத்தோலிக்க மதம்

கேசியன் ஒரு கத்தோலிக்க மதத்துறவி. கேசியனைப் போலவே ரோமன் கத்தோலிக்க மதமும் மூல பாவத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. இந்த விஷயத்தில் இரு பகுதியாரும் பெலேஜியஸின் போதனைகளை எதிர்த்தார்கள். ஆனால், கேசியனின் செமி-பெலேஜியனிசப் போதனைகளை ரோமன் கத்தோலிக்க

மதம் எதிர்த்தது. விசுவாசத்தின் ஆரம்பப் படி நிலையில் மனித சித்தமே முழு வல்லமையோடு செயல்பட்டு மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு காரணமாக இருக்கிறது என்பதை அது ஏற்றுக்கொள்ள மறுத்தது. மனிதன் நன்மையானதைச் செய்யக்கூடிய நிலைக்கு வருவதற்கு மறுபிறப்பாகிய கிருபை அவனுக்கு அவசியம் என்றது ரோமன் கத்தோலிக்க மதம். ஆனால், கத்தோலிக்க மதத்தோடு நமக்கிருக்கும் பிரச்சனை அது இந்தக் கிருபை ஞானஸ்நானத்தின் மூலமாக மனிதனுக்கு கிடைக்கிறது என்று போதிப்பதுதான். ஞானஸ்நானத்தின் மூலம் மறுபிறப்பு (Baptismal regeneration) என்ற வேதத்துக்கு முரணான போதனையை கத்தோலிக்க மதம் வலியுறுத்துகிறது. இதை சீர்திருத்த கிறிஸ்தவம் அடியோடு எதிர்க்கிறது.

சுருக்கமாகச் சொல்லப்போனால் ரோமன் கத்தோலிக்க மதம் தொடர்ந்து மூல பாவமென்றொன்றில்லை என்கிற பெலேஜியனிசப் போதனைகளை எதிர்க்கிறது. அது கேசியனுடைய செமி-பெலேஜியனிசப் போதனையையும் எதிர்த்து ஆகஸ்தீனுடைய போதனையின் பக்கம் தலை சாய்த்த போதும் ஆகஸ்தீனுடைய போதனைகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஆகவே, செமி-ஆகஸ்தீனியனிசம் (Semi-Augustinianism) என்று சிலர் அழைக்கிறவிதமாக ரோமன் கத்தோலிக்க மதப் போதனைகள் இருக்கின்றன. கேசியனின் போதனைகளை ரோமன் கத்தோலிக்க மதம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதை செமி-பெலேஜியனிசத்தோடு சம்பந்தப்பட்டதாகத்தான் கணிக்க வேண்டியிருக்கிறது. மனித சித்தத்தைப் பற்றிய ரோமன் கத்தோலிக்க மத நம்பிக்கையைக் கொஞ்சம் கூர்ந்து கவனிப்போம். மனிதனுடைய இரட்சிப்புக்கு தெய்வீக கிருபையின் உதவி தேவையானதாக இருக்கிறது என்கிறது ரோமன் கத்தோலிக்க மதம். இந்த விஷயத்தில் இது பெலேஜியனிசத்தோடு ஒத்துப் போகவில்லை. ஆனால், பாவத்தில் வீழ்ந்திருக்கும் மனிதன் தன்னுடைய இரட்சிப்பிற்காக கடவுளோடு பங்குகொண்டு அவருக்கு சமமாக ஒத்துழைக்கும் வல்லமையைக் கொண்டிருக்கிறான் என்று ரோமன் கத்தோலிக்க மதம் விளக்குகிறது. அவனுடைய சித்தம் மூல பாவத்தால் பலவீனமடைந்திருந்த போதும் இந்த ஆவிக்குரிய வல்லமை அவனில் தொடர்ந்தும் இருப்பதாக அது விளக்குகிறது. ஆகவே, மனித சித்தம் நன்மையையும் தீமையையும் மாறி மாறிச் செய்துவிடக்கூடிய நடுநிலையில் இருப்பதாக கத்தோலிக்க மதத்தின் போதனை அமைந்திருக்கிறது. இந்த இடத்தில் ரோமன் கத்தோலிக்கப் போதனையில் நாம் ஆகஸ்தீனியனிசத்தைவிட செமி-பெலேஜியனிசத்தின் செல்வாக்கைத்தான் அதிகமாகப் பார்க்கிறோம்.

## லூத்தரும், கல்வினும்

சென்ற இதழில் வந்த ஆக்கங்களில் 16ம் நூற்றாண்டில் எவ்வாறு மார்டின் லூத்தர் இராஸ்மஸோடு மனித சித்தத்தின் நிலை பற்றிய தர்க்கங்களில் ஈடுபட நேரிட்டது என்று விளக்கியிருக்கிறேன். 16ம் நூற்றாண்டு திருச்சபை சீர்திருத்தப் போராட்டத்தின் அடிப்படை அம்சமாக மனித சித்தம் பற்றிய விவாதம் இருந்திருக்கிறது என்றும் விளக்கியிருக்கிறேன். மார்டின் லூத்தருடைய அருமையான நூலான

*'சித்தத்தின் அடிமைத்தனம்' உருவாகவும் மனித சித்தம் பற்றிய ரோமன் கத்தோலிக்க மதத்தின் போதனையே காரணமாகவும் இருந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டு இறையியல் அறிஞரான பென்ஜமின் வோர்பீல்ட், 'புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பகிரங்க அறிக்கை' என்று இந்த நூலைப் பாராட்டி எழுதியிருக்கிறார். 5ம் நூற்றாண்டில் ஆகஸ்தீனுக்கும் பெலேஜியஸுக்கும் இடையில் எந்த விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதோ அதே விஷயத்தில்தான் 16ம் நூற்றாண்டில் லூத்தருக்கும் இராஸ்மஸுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இரட்சிப்பின் ஆரம்பப் படிநிலையில் கடவுள் சுயமாக இயங்கிச் செயல்படுகிறாரா? அல்லது மனிதன் அந்த விஷயத்தில் ஆரம்ப நடவடிக்கை எடுக்கிறானா என்பது பற்றிய மொனர்ஜிசத்துக்கும் சினர்ஜிசத்துக்கும் இடையிலான கருத்து வேறுபாடு இது. 'கிருபை மட்டுமே' என்ற சீர்திருத்தவாதத்தின் போதனையில் காணப்படும் கிருபை பற்றிய விஷயத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடாக இது இருந்தது. விசுவாசத்தினால் நீதிமானாக்குதல் என்ற கத்தோலிக்க மதத்திற்கு எதிரான போதனையிலும் இதே கிருபைப் பற்றிய விஷயத்தில்தான் சீர்திருத்தவாதிகள் அவர்களோடு முரண்பட்டனர்.*

*இராஸ்மஸ் திருச்சபை சீர்திருத்தப் போராட்டத்தில் மார்டின் லூத்தரோடு ஒத்துப் போகவில்லை. மனித சித்தத்தின் வல்லமையை நிரூபிக்க லூத்தரோடு பல தர்க்கங்களில் இராஸ்மஸ் ஈடுபட்டிருந்தார். இராஸ்மஸைப் பொறுத்தவரையில் 'கிருபையின் துணையில்லாமல் இயங்க முடியாத மனித சித்தம் உண்மையில் சுயாதீனமான சித்தமே இல்லை' என்பதுதான். இதற்கு பதிலளிக்கும் லூத்தர், 'கடவுளுடைய கிருபையின் துணையோடு இயங்காவிட்டால் மனித சித்தம் ஒருபோதும் சுயாதீனமானதாக இருக்க முடியாது என்றும், அந்த நிலையில் அது நன்மையை நோக்கித் திரும்பமுடியாமல் நிரந்தரமாக பாவத்துக்குக் கட்டுப்பட்டதாகத்தான் இருக்கும்' என்றும் கூறினார். 'சுயாதீனமான சித்தம்' என்ற பதங்கள் அநேகருக்குக் குழப்பமூட்டுவதாக இருப்பதாக லூத்தர் கருதினார். 'எந்தத் திசையை நோக்கியும், அதாவது நன்மையையோ அல்லது தீமையையோ சுதந்திரமாக நாடிச் செய்யக்கூடிய மனித வல்லமையே சுயாதீனமான சித்தம்' என்பதே சுயாதீன சித்தத்தின் பொதுவான விளக்கமாக இருந்தது. இதுவே இராஸ்மஸுடையதும், கத்தோலிக்க மதத்தினுடையதும் நம்பிக்கையாக இருந்தது. சுயாதீன சித்தம் பற்றிய இந்தத் தவறான கருத்தை இரட்சிப்பின் பெரும் எதிரியாகவும், அநேக குழப்பங்களை உருவாக்கும் ஆபத்தாகவும் லூத்தர் கருதினார். இந்த முறையில் கிருபையின் துணையில்லாமல் எந்தப் பக்கமும் திரும்பக்கூடிய சித்தம் நிச்சயமாக சுயாதீனமான சித்தமாக இருக்க முடியாது என்றார் லூத்தர். இராஸ்மஸுடைய வாதங்களை லூத்தர் தவிடுபொடியாக்கினார்.*

*சீர்திருத்தவாதியான ஜோன் கல்வினுடைய கருத்துக்கள் ஆகஸ்தீனுடைய போதனைகளோடு ஒத்துப் போகிறவையாக இருந்தன. கல்வின் இதுபற்றிப் பல இடங்களில் தன்னுடைய எழுத்துக்களில் எழுதியிருந்தார். ஆகஸ்தீன், மார்டின் லூத்தர், கல்வின் எல்லோருமே மனித சித்தம் பாவத்தினால் பாதிக்கப்பட்டு ஆவிக்குரிய நன்மைகளை செய்யக்கூடிய ஒழுக்க*

வல்லமையை இழந்து காணப்படுகிறது என்பதை உறுதியாக விளக்கியிருக்கிறார்கள். மனித சித்தம் பாவத்திற்கு கட்டுப்பட்டிருப்பதால் அதன் தன்மைக்கேற்ற விதத்தில்தான் அதால் இயங்க முடியும் என்பது இவர்கள் எல்லோருடையதும் போதனையாக இருந்தது. மனித சித்தம் ஆவிக்குரிய நன்மையைச் செய்வதற்கு மறுபிறப்பாகிய கிருபையை மனிதன் அடைவது அவசியம் என்று இவர்கள் விளக்கினார்கள். இந்த விஷயத்தில் இவர்கள் பெலேஜியஸினுடையதும், கேசியனுடையதும், ரோமன் கத்தோலிக்க மதத்தினுடையதும் போதனைகளை அடியோடு எதிர்த்தார்கள்.

## ஆர்மீனியஸும் (Arminius), மனித சித்தமும்

இதுவரை பாவத்தில் இருக்கும் மனிதனுடைய சித்தத்தைப் பற்றி பெலேஜியஸ் முதற்கொண்டு செமி-பெலேஜியனிசம் வரையிலான கோட்பாடுகள் எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தன என்றும் அந்தக் கருத்துக்களின் போலித்தன்மையை சீர்திருத்தவாதிகளான ஆகஸ்தீனும், மார்டின் லூத்தரும், கல்வினும் எந்தவிதத்தில் இனங்காட்டி மனித சித்தம் பற்றிய சரியான வேதவிளக்கங்களைக் கொடுத்தார்கள் என்றும் பார்த்து வந்திருக்கிறோம். 1689 விசுவாச அறிக்கையும் சீர்திருத்தவாதிகளின் போதனைகளையே 9ம் அதிகாரத்தில் விளக்குகிறது என்பதையும் முந்தைய ஆக்கத்தில் பார்த்திருக்கிறோம். இனி செமி-பெலேஜியனிசத்துக்குப் பிறகு எழுந்த ஆர்மீனியனிசம் (Arminianism) என்ற போதனை மனித சித்தத்தைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதையும் பார்ப்பது நல்லது. இன்றைக்கு ஆர்மீனியனிசம் தமிழ் பேசும் நாடுகளிலெல்லாம் எல்லா சபைப்பிரிவுகளிலும் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கும் ஒரு கோட்பாடு. கடவுளின் கிருபை, இரட்சிப்பு, மனித சித்தம் பற்றிய அதன் போதனைதான் என்ன என்பதை இப்போது கவனிக்கலாம்.

ஜேம்ஸ் ஆர்மீனியஸின் பெயரைக் கொண்டுதான் 'ஆர்மீனியனிசக்' கோட்பாடுகள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. மனித சித்தத்தைக் குறித்து ஆர்மீனியஸ் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்,

> 'மறுப்பிறப்படையாத அனைத்து மனிதர்களும் சுயாதீன சித்தத்தோடேயே இருக்கிறார்கள். அதனால் அவர்களால் பரிசுத்த ஆவியின் கிரியையை தடுத்து நிறுத்தி கடவுளுடைய கிருபையை நிராகரிக்க முடிகிறது. இருதயக் கதவைத் தட்டுகிறவருக்கு கதவைத் திறக்காமல் இருக்க முடிகிறது. இதையெல்லாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாலும், நியாயத்தீர்ப்புக்கு ஒதுக்கப்பட்டவர்களாலும் வேறுபாடில்லாமல் உண்மையிலேயே செய்ய முடிகிறது.'

இந்த முடிவுக்கு ஆர்மீனியஸ் வந்ததெப்படி? உண்மையில் ஆர்மீனியஸ் 'கிருபையின் துணையில்லாமல் மனித சித்தத்திற்கு எந்த நன்மையைச் செய்யும் வல்லமை இல்லை' என்று தன்னுடைய எழுத்துக்களில் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால் ஆர்மீனியனிசத்திற்கும் சீர்திருக்க கிறிஸ்தவத்திற்கும் எந்த விஷயத்தில் முரண்பாடு என்ற கேள்வி நிச்சயம் எழும். மறுபிறப்பைப் பற்றிய போதனையில்தான் ஆர்மீனியஸின் விளக்கம்

சீர்திருத்தப் போதனைகளோடு முரண்படுகிறது. கடவுளின் கிருபை இரட்சிப்பிற்கு அவசியமாயிருந்த போதும், போதுமானதாக இல்லை என்பது ஆர்மீனியஸின் போதனை. கிருபையை ஆர்மீனியஸ் இரண்டுவிதமாக, போதுமான கிருபை (Sufficient grace), செயல்திறனுடைய கிருபை (Efficient grace) என்ற பெயரில் பிரித்துக் காட்டுகிறார். ஒருவர் இரட்சிப்படைய போதுமான கிருபை (Sufficient grace) அவசியம், இருந்தபோதும் அது யாருக்கு கொடுக்கப்படுகிறதோ அவர் அதை ஏற்றுப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் அது பலனற்றுப் போய்விடும் என்கிறார் ஆர்மீனியஸ். அதை மனிதன் ஏற்றுக்கொள்ளாமல் போகிறபடியால்தான் கடவுளால் அவனை நீதியாகத் தண்டிக்க முடிகிறது என்றும், இல்லாவிட்டால் கடவுளின் நியாயத்தீர்ப்புக்கு வழியில்லை என்றும் விளக்குகிறார்.

இந்த இடத்தில் ஆர்மீனியஸின் போதனையை சிந்தித்துப் புரிந்துகொள்ள வேண்டும். மனிதன் இரட்சிப்படைய அவனுக்கு கிருபை தேவைப்படுகிறது என்கிறார் ஆர்மீனியஸ் (Prevenient grace - மனந்திரும்புதலுக்கு முன் கிடைக்கும் கிருபை). ஆனால், இந்தக் கிருபை சுவிசேஷத்தின் மூலம் எல்லோருக்கும் (Universal) சமமாகக் கொடுக்கப்படுகிறது என்றும், இது இரட்சிப்பிற்காக மனிதன் சுயாதீனமாக சித்தங்கொள்ளுவதற்கான ஆரம்ப உதவியைச் செய்கிறது என்பதும் ஆர்மீனியஸின் போதனை. இந்த இடத்தில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆர்மீனியஸைப் பொறுத்தவரையில் இந்தக் கிருபையை மனிதனால் நிராகரித்துவிட முடியும். இதற்குக் காரணம் மனிதனுக்கு சுயாதீனமான சித்தம் இருப்பதுதான். ஆர்மீனியஸைப் பொறுத்தவரையில் சித்தம் சுயாதீனமாக இருக்கவேண்டுமானால் கிருபையால் புதுப்பிக்கப்பட்ட நிலையிலும் அதற்கு கிருபையை ஏற்றுக்கொள்ளவும் நிராகரிக்கவும் சம வல்லமை இருக்க வேண்டும். மனிதனுடைய சுயாதீன சித்தத்தின் துணையில்லாமல் கிருபை இரட்சிக்கும் கிருபையாக இருக்க முடியாது. அதேவேளை கிருபையின் துணையில்லாமல் மனிதன் இரட்சிப்புக்குரிய தன் பங்கைச் செலுத்த முடியாது என்பதும் ஆர்மீனியஸின் போதனை. இரட்சிப்பு ஒருவரில் ஏற்பட இரண்டும் அவசியம்.

மறுபிறப்பைப் பற்றி ஆர்மீனியஸ் கொடுக்கும் விளக்கங்கள் மனதைக் குழப்பக்கூடியவை. ஆர்மீனியஸின் போதனையில் சினர்ஜிசத்தை நாம் சந்திக்கிறோம். மொத்தத்தில் மனிதன் இரட்சிக்கப்பட கடவுளும் மனிதனும் அதில் சம பங்கு கொண்டு ஒத்துழைத்தால் மட்டுமே மனிதனுக்கு இரட்சிப்பு உண்டு என்பது ஆர்மீனியஸின் போதனை. இது நிச்சயம் ஆகஸ்தீன், மார்டின் லூத்தர், கல்வின் ஆகியோரது போதனைகளுக்கும், சீர்திருத்த விசுவாச அறிக்கைகள், வினாவிடைப்போதனைகள் அனைத்திற்கும் முரணானது. இரட்சிப்புத் தொடர்பான சீர்திருத்தவாதிகளின் மொனர்ஜிசப் போதனைகளுக்கும் ஆர்மீனியஸின் சினர்ஜிசப் போதனைகளுக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகின்றது. உண்மையில் பார்க்கப்போனால் இதுவும் கேசியனின் செமி-பெலேஜியனிசத்தைப் போன்றதுதான். ஒரே விஷயத்தை இருவரும் சில விஷயங்களில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தி விளக்குகிறார்கள். (இனியும் வரும்)

## சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்கள் தமிழகத்திலுள்ள கீழ் வரும் ஐந்து முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

| எண் | புத்தகப் பெயர் | ஆசிரியர் | ரூ.பை. |
|---|---|---|---|
| 1. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை | A.N. மார்டின் | 25.00 |
| 2. | கர்த்தரின் வேதம் | ஆர். பாலா | 35.00 |
| 3. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ஆர். பாலா | 15.00 |
| 4. | பிரசங்கிகளும் பிரசங்கமும் | ஆர். பாலா | 55.00 |
| 5. | சிறுவர்களுக்கான வேத உபதேசம் | ஆர். பாலா | 20.00 |
| 6. | குடும்ப ஆராதனை | ஆர். பாலா | 20.00 |
| 7. | தாம்பத்திய உறவில் நெருக்கம் | அலன் டன் | 75.00 |

**நாமக்கல்லில்**

திரு. K. அருள் செல்வம், 4/630, கிருபை இல்லம், ஆண்டவர் நகர்,
நாமக்கல் 637002. கைப்பேசி 9443798315

**கோயம்புத்தூரில்**

திரு. டேவிட் பிரகாசா, 14 சுந்தரம் 3வது தெரு, PN புதூர்,
கோயமுத்தூர் 641041. கைப்பேசி 9500748128

**மதுரையில்**

போதகர் S.D. ஜெரால்டு, (கிருபை சபை) 5B/9/8 - தன்ராஜ் ஸ்டோர்,
சுப்ரமணியபுரம், விசாலபாகம் 2வது தெரு, மதுரை 625011.
கைப்பேசி 9994874077

**கரூரில்**

போதகர் T. அண்ணாதுரை, (கிருபை சுவிசேஷ சபை) வீரியபாளையம் (PO),
பஞ்சப்பட்டி (via), K.R. புரம் (TK), கரூர் 639119. கைப்பேசி 9789741732

**சென்னையில்**

போதகர் M. ஜேம்ஸ் (கிருபை சீர்திருத்த சபை) 6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம், சென்னை 600023. கைப்பேசி 9445671113

---

**ஸ்ரீலங்காவிலுள்ளவர்கள் திருமறைத்தீபம் இதழைப் பெற கீழுள்ள முகவரியை தொடர்புகொள்ளவும்:**
**டியாகிறைசிஸ் புக் சர்வீஸ், 19 இராஜசிங்க வீதி, கொழும்பு, ஸ்ரீலங்கா**

**ஸ்ரீலங்காவிலுள்ளவர்கள் சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்களைப் பெற கீழுள்ள முகவரியை தொடர்புகொள்ளவும்:**
**திரு. மில்டன் மஸ்குறங்கே, 25 ஷூ ரோடு, கொழும்பு 13, ஸ்ரீலங்கா.**
**தொலைப்பேசி: 2345654; கைப்பேசி 0722818296**

# திருமறைத்தீபம் இணைய தளம்




## திருமறைத்தீபம்

ஒரு புதிய இணைய தளத்தை திருமறைத்தீபம் பத்திரிகைக்காக உருவாக்கியிருக்கிறோம். இந்தத் தளத்தில் வாசகர்கள் பத்திரிகையை PDF மற்றும் Unicode மூலமும் வாசிக்கவும், டவுன்லோட் செய்துகொள்ளவும் வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.

## தமிழ் ஆடியோ, வீடியோ பிரசங்கங்கள்

அத்தோடு இத்தளத்தில் தமிழ் பிரசங்கங்களை வாசகர்கள் கேட்டுப் பயன்பெறவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இருக்கும் செய்திகளோடு மேலும் செய்திகளை இனி வருங் காலங்களில் சேர்க்கவிருக்கிறோம்.

## கிறிஸ்தவ இலக்கியங்கள்

தமிழில் நாம் வெளியிட்டு வருகிற நூல்களைப் பற்றிய விபரங்களையும், அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரிகளையும் இத்தளத்தில் தந்துள்ளோம். வாசகர்கள் அந்தந்த முகவரிகளோடு தொடர்புகொண்டு நூல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

## புதிய ஆக்கங்கள்

ஆத்மீக வளர்ச்சிக்கும், இறையியல் அறிவை வளர்த்துக்கொள்ளவும் துணை செய்யும் புதிய ஆக்கங்களையும் வருங்காலத்தில் இந்தத் தளத்தின் மூலம் தரவிருக்கிறோம்.


இத்தளம் உங்களுக்குப் பயனளிக்கும் என்று நம்புகிறோம். இது பற்றிய உங்கள் கருத்துக்களையும் எங்களுக்கு அறிவியுங்கள். அது தளத்தை மேலும் உங்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைக்க எங்களுக்குத் துணை புரியும்.

**http://www.biblelamp.me**

# திருமறைத்தீபம்

மலர் 18 அக்டோபர் - டிசம்பர் 2012 இதழ் 4

1. தமிழ் வேதம் உங்களுக்குப் புரிகிறதா?
2. பிரசங்கத்தில் கிறிஸ்தவத் தமிழ்
3. 1689 விசுவாச அறிக்கையைப் படிக்க வேண்டிய முறை
4. பாவமும் மனித சித்தமும்
5. நீயும் நானுமா?




## புதிய வெளியீடு

போதகர் அல்பர்ட் என். மார்டின் பிரசங்கித்த “பிரியாவிடைப் பிரசங்கங்கள்” தற்போது

“அழிவில்லா ஆத்மீக ஆலோசனைகள்”

என்ற பெயரில் புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ள தமிழக முகவரிகளில் இப்புத்தகத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் வேண்டுவோர் கூடுதல் பிரதிகளுக்கான விலையாக ரூ.75/- (ஒரு புத்தகத்தின் விலை) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபாலில் பெற விரும்புபவர்கள் தபால் கட்டணம் குறித்தத் தகவல்களை பத்திரிகையிலுள்ள கைப்பேசி எண்களில் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.




குடும்ப ஆராதனை




சிறுவர்களுக்கான வேத உபதேசம்

## மறு வெளியீடு

வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கீழ்வரும் புத்தகங்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டிருக்கிறது.

1. “குடும்ப ஆராதனை” விலை ரூ. 20/-
2. “சிறுவர்களுக்கான வேத உபதேசம்” விலை ரூ. 20/-

பத்திரிகையிலுள்ள தமிழக முகவரிகளில் இப்புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தபால் கட்டணம் தனி.